செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௨ பங்குனி	பகுதி
௬௬	மார்ச் — 1971	௩

முற்றெச்சங்கள்

இரா. கோதண்டராமன், எம். ஏ., (தமிழ்), எம் ஏ. (மொழியியல்)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1. 0 வினை முற்றுக்கள் எச்சப் பொருண்மையை உணர்த்தும் போது முற்றெச்சங்களாக நின்று செயல்படுதல் பழந்தமிழில் இயல்பாகக் காணப்படும் ஒன்றாகும். முற்றெச்சங்களாக நடைபெறும் முற்று வினைகள் காலப்பொருண்மை (Temporals) யினவும், விழைவுப் பொருண்மை (Desiderative) யினவும், ஏவற்பொருண்மை (Imperatives) யினவும், வியங்கோட் பொருண்மை (Optatives) யினவும் எனப் பல திறத்தனவாதலால், அவற்றால் உணர்த்தப்பெறும் எச்சப் பொருண்மை பல திறத்தனவாக அமைகின்றன. முற்றெச்சங்கள் உணர்த்தும் எச்சப்பொருண்மைகளைச் சுருக்கமாக ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

2. 0 முற்றெச்சங்களுக்கு நிலைக்களனாக அமையும் வினைமுற்றுக்களை (1) செய்து, (2) செய்து+பால்விகுதி, (3) செய்கு, (4) செய்கு+பால்விகுதி, (5) செய்பு, (6) செய்பு+பால்விகுதி, (7) செய்ம்மார், (8) செய்யும், (9) செயல்/செய்தல், (10) செய்யியர்

ஆகிய வாய்பாடுகளில் அமைத்து அவற்றால் உணர்த்தப்பெறும் எச்சப் பொருண்மையை ஆராயலாம். இவற்றுள் ஈற்றில் நிற்கும் செயல்/செய் தல் மற்றும் செய்யியர் ஆகிய வாய்பாட்டு வினைகள் ஏவல் கண்ணிய வியங்கோட்பொருண்மையை உணர்த்துவனவாகக் கருதலாம். செய்ம்மார், செயல்/செய்தல், செய்யியர் ஆகிய வாய்பாட்டு வினைகள் எச்சமாக நிற்கும்போது செயவென் எச்சப்பொருண்மையைத் தழுவி நிற்கும். செய்யும் வாய்பாட்டுவினைஎச்சமாகச் செயல்படும்போது பெயரெச்சப் பொருண்மையைக் குறித்து நிற்கும். தமிழ வினைகளை விரிவாக ஆராய்ந்த தொல்காப்பியர் செயல்/செய்தல் வாய்பாட்டு வினைகள் முற்றாகவும், எச்சமாகவும் செயல்படும் பான்மை குறித்து ஏதும் பேசவில்லை.

2. 1 *செய்து வாய்பாட்டு முற்றெச்சம்:* தமிழில் செய்து வாய்பாட்டு வினைகள் தன்மை ஒருமை, படர்க்கை அஃறிணை ஒருமை ஆகிய இரு இடங்களில் மட்டுமே பயனிலையாக வழங்கும் எனக் குறிக் கிறார் தொல்காப்பியர்.

கடதற வென்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொடு
என்னென் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே
(சொல். (சேனா) 203)

ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும். (சொல் (சேனா) 217)

செய்து வாய்பாட்டு வினைகள் எச்சப்பொருண்மையையும் உணர்த்த வல்லன என்பதை வினையெச்சங்கள் பற்றிய நூற்பா (சொல் (சேனா) 228) வில் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். எச்சப்பொருண்மையை உணர்த்துங்கால் செய்து வாய்பாட்டு வினைகள் இருதிணை ஐம்பால் மூவிடவப் பெயர்களுக்கும் பொதுவாக நின்று செயல்படுகின்றன. எச்ச மாக வழங்கும்போது எல்லாப்பெயரின்கண்ணும் செல்லும் செய்து வாய்பாட்டு வினைகள், பயனிலையாக வழங்கும்போது மட்டும் மாறு பட்டு நிற்கின்றன. இதை மொழி வளர்ச்சியில் தோன்றிய ஒரு வழக்குப் பிறழ்ச்சி(Functional Discrepancy)யாகக் கருதத் தோன்று கிறது. மலையாள மொழியில் இத்தகைய பிறழ்ச்சி காணப்படவில்லை. தமிழில் சங்கம் மற்றும் சங்கம் மருவிய இலக்கியங்களில் பயின்று வழங்கும் செய்தென (<செய்து+என), செய்தாங்கு (<செய்து+ ஆங்கு,) செய்தன்ன (<செய்து +அன்ன,) செய்தற்று (<செய்து+

அற்று) ஆகிய வாய்பாட்டுத் தொடர்களைக் கொண்ட தொடரன்களை நுணுகி நோக்கும் போது, செய்து வாய்பாட்டு வினைகள் ஏனைய படர்க்கைப் பெயர்களின்கண்ணும் பயனிலைகளாக நின்ற செய்தி வெளிப்படுகிறது.

1. பெருங்தோள் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே (புறம் 246, 13-15)

2. (சாறுதலைக் கொண்டெனப்) பெண்ணீற் றுற்றெனப்
(பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி னிணக்கு மிழிசினன் கையது
போழ்தூண் டூசியின்) விரைந்தன்று (மாதோ)
(ஊர்கொள வந்த பொருநனொ
டார்புனை தெரிய) னெடுந்தகை போரே (புறம் 82)

3. அறிவில முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கட்கண் டாங்கு
அலமரல் வருத்தம் தீர யாழநின்
நலமென் பணைத்தோள் எய்தினம் (நற்றிணை 9-1-4)

4. அறிவும் உள்ளமும் அவர்வயிற் சென்றென
வறிதால் இகுளையென் யாக்கை (நற்றிணை 64-8-9)

மேற்காட்டிய நான்கு தொடரன்களும் புறத்தொடரன் (Matrix Sentence) மற்றும் அகத் தொடரன் (Constituent Sentence) ஆகிய இருதொடரன்களைத் தம்முள் பிணைத்துக் கொண்டு பின்னல் தொடரன் (Complex Sentences) களாக இயல்கின்றன.

2.11 மாற்றிலக்கண நூலார் (Transformationalists) பின்னல் தொடரனில் அகப்படுக்கும் தொடரனை (Embedding Sentence) புறத்தொடரன் (பு. தொ) என்றும், அகப்படும் தொடரனை (Embedded Sentence) அகத்தொடரன் (அ. தொ) என்றும் குறிப்பிடுவர். எடுத்துக்காட்டாக, கண்ணன் வந்தபொழுது மணியன் சென்றான் என்ற பின்னல் தொடரனில் மணியன் அப்பொழுது சென்றான் என்பது புறத்தொடரனாகவும், கண்ணன் வந்தான் என்பது அகத்தொடரனாகவும் குறிக்கப்பெற்று, பின்னல் தொடரனின் அமைப்புக் கீழ்வருமாறு புலப்படுத்தப்படும்.

[மணியன் [கண்ணன் வந்தான்] அப்பொழுது சென்றான்]
பு. தொ அ. தொ அ. தொ பு. தொ

இவ் அமைப்பு கண்ணன் வந்தபொழுது மணியன் சென்றான் என்ற தொடரனின் அகத்தோற்றமாகும். இம் முறையைப் பின் பற்றி மேற் குறித்த நான்கு தொடரன்களின் அகத்தோற்றத்தைக் கீழ் வருமாறு ஆராயலாம்.

1 அ. [நள்ளிரும் பொய்கையும் தீயும் [பெருந்தோள் கணவன் மாய்ந்து]
புு. தொ அ. தொ அ தொ
என(வே) ஓரற்றே]
பு. தொ.

2 அ, [நெடுந்தகைபோர் [பெண் ஈற்று உற்று] என(வே) விரைந்தன்று]
பு. தொ அ தொ அ. தொ பு. தொ

3 அ. [*யாம் [ஆர்வமாக்கள் வழிபடுதெய்வம் கண்கண்டு] ஆங்கு
பு. தொ அ. தொ அ. தொ
நின் நலமென் பணைத்தோள் எய்தினம்]
பு. தொ

4 அ. [என் யாக்கை [அறிவும் உள்ளமும் அவர்வயிற் சென்று] என(வே)
பு. தொ அ. தொ அ தொ
வறிதால்]
பு தொ.

அகத் தொடரன்களில் அமைந்திருக்கும் மாய்ந்து, உற்று, கண்டு, சென்று ஆகிய பயனிலைகள் தழுவிநிற்கும் எழுவாய்கள் தொல்காப்பிய நிலையினின்றும் மாறுபட்டிருப்பதைக் காணலாம். இதைக் கருத்தில் கொண்டு நோக்கும்போது தொல்காப்பியர் காலத்துக்குமுன் படர்க்கையில் எல்லாப் பெயர்களோடும் செய்து வாய்பாட்டு வினைகள் பயனிலைகளாக நின்றன என்ற உண்மை புலப்படுகின்றது

2.12 தமிழில் தன்மை ஒருமை மற்றும் படர்க்கைப் பெயர்களோடு மட்டும் பயனிலைகளாக வழங்கிய செய்து வாய்பாட்டுவினைகள் முன்னிலைப் பெயர்களோடும் பயனிலையாக வழங்கினவா எனத்தெரியவில்லை. மலையாளத்தில் மூன்று இடங்களிலும் பயனிலையாகவும், எச்சமாகவும் தமிழில் மூன்று இடங்களில் எச்சமாகவும் இரண்டு இடங்களில் பயனிலையாகவும் செய்து வாய்பாட்டு வினைகள் வழங்கும் நிலையை நோக்கும்போது தமிழ்-மலையாள மூலமொழி (Proto Tamil—

Malayalam)யில் இவை மலையாளத்தில் அமைந்திருப்பதுபோல் மூன்று இடங்களிலும் பயனிலையாகவும், முற்றெச்சமாகவும் பயின்றனவாகக் கருதலாம். பின்னர் தமிழ்-மலையாள மூலமொழியினின்றும் தமிழ் தனியாகக் கிளைத்த போது செய்து வாய்பாட்டு வினைகள் முற்றுப் பொருண்மையை இழக்கத் தொடங்கி எச்சப்பொருண்மையை மேற்கொண்டனவாதல் வேண்டும். பழந்தமிழில் பால் விகுதிகளை ஏற்ற செய்து வாய்பாட்டு வினைகள் தன்மை முன்னிலை, படர்க்கை மூன்று இடங்களிலும் பயனிலையாக மட்டுமின்றி எச்சமாகவும் நிகழ்கின்றன. இதை அகச்சான்றாகக் கொண்டால், தமிழிலும் மலையாளத்தில் உள்ளதுபோல் ஒரு நிலையில் செய்து வாய்பாட்டு வினைகள் பயனிலையாக வழங்கியிருக்கக் கூடுமோ என்று ஐயுறத்தோன்றுகிறது.

2.13 தமிழில் இகரத்தைக் கால இடைநிலையாகக்கொண்டு ஆடி, ஓடி, பாடி, நோக்கி என வழங்கும் வினையெச்சங்களை செய்யி என்ற வாய்பாட்டின்கீழ்க்கொண்டுவரலாம். செய்யி வாய்பாட்டுவினைகள் செய்யியாங்கு(◁செய்யி + ஆங்கு,)செய்யியன்ன(◁செய்யி + அன்ன) செய்யியற்று (◁செய்யி + அற்று) ஆகிய வாய்பாட்டுத் தொடர்கள் அமைந்துள்ள தொடரன்களில் செய்யி வாய்பாட்டு வினைகள் பயனிலையாகச் செயல்படுகின்றன.

5. நெடுவெள் ளுப்பின் நிரம்பாக் குப்பை
பெரும்பெயற்கு உருகி யாஅங்குத்
திருந்திழை நெகிழ்ந்தன தடமென் றோளே (அகம். 206.14-16

6 சுடர்பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற்
றிலங்குகதிர் இடவெயிற் றோன்றி யன்ன
....
ஆய்தொடி மகளிர் (நறுந்தோள் புணர்ந்து) (பத்துப்பாட்டு 6. (702-703&712)

7. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல் (குறள் 401)

இத்தொடரன்களின் அகத்தோற்றத்தினைக் கீழ்வருமாறு புலப்படுத்தலாம்.

5 அ. [திருந்திழை [நெடுவெள் உப்பின் நிரம்பாக் குப்பை
புு. தொ அ. தொ
பெரும்பெயற்கு உருகி] ஆங்கு தடமென்தோள் நெகிழ்ந்தன]
அ, தொ பு. தொ

6 அ. [(* அவர்கள்) [இனவெயில் தோன்றி] அன்ன ஆய்தொடி
மகளிர்]
புதொ அ.தொ அ.தொ பு.தொ

7 அ. [(* ஒருவன்) [நிரம்பிய நூலின்றிக் கோட்டிகொளல்
[(* ஒருவன்)
பு.தொ அ.தொ
அரங்கின்றி வட்டு ஆடி] அற்று]
அ தொ பு தொ

இவ் ஆய்வில் செய்யி வாய்பாட்டு வினைகளாகிய உருகி, தோன்றி, ஆடி முதலியவை அகத்தொடரன்களில் பயனிலையாகச் செயல்படுவதைக் காணலாம். இதன் அடிப்படையில் செய்யிவாய்பாட்டு வினையெச்சங்களை வரலாற்று முற்றெச்சங்களாகக்கொள்வது பொருத்தமாக அமையும்.

2.2 செய்து+பால்விகுதி வாய்பாட்டு முற்றெச்சம்: பால் விகுதியேற்ற செய்து வாய்பாட்டுவினைகள் முற்றெச்சங்களாக வழங்கும் நிலையைத் தொல்காப்பித்திலும், சங்க இலக்கியங்களிலும் பெருவாரியாகக் காணலாம். இத்தகைய வினைகள் எச்சப்பொருண்மையை உணர்த்தும் போது எழுவாயின் திணை, பால், எண், இடப்பொருண்மைகளைத் தாமும் உணர்த்தி நிற்கின்றன.

8. தன்மை ஒருமை: அலந்தனென் உழல்வென் கொல்வோ
(அகம் 45-15)

9. தன்மைப்பன்மை, விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
(நற்றிணை 172. 1-2)

10. முன்னிலை ஒருமை: ஒருநாள் உறைந்திசி னோர்க்கும் வழிநாள்
தம்பதி மறக்கும் பண்பின் எம்பதி
வந்தனை சென்மோ வளைமேய் பரப்ப
(அகம். 200. 5-7)

11. முன்னிலைப் பன்மை: சேர்ந்தனிர் செல்குவி ராயின்-
(அகம் 200-12)

12. படர்க்கை ஆண்பால் ஒருமை: வருமே தோழி நன்மலை நாடன்
வேங்கிறைப் பணைத்தோள்
வரைந்தனன் கொளற்கே
(கலி. 38. 24&26)

13. படர்க்கைப் பெண்பால் ஒருமை:
பொலங்கலம் சுமந்த பூண் தாங் இளமுலை
....
கொண்டனன் நின்றோள் கண்டுநிலைச் செல்லேன்
(அகம். 16. 9 & 11)

14. படர்க்கைப் பலர்பால்:
வணங்கிறை மகளிர் அயர்ந்தனர் ஆகும்
கழங்குறழ் ஆலியொடு கதழுறை சிதறிப்
பெயல்தொடங் கின்றால் வானம்— (அகம். 334. 7-9)

15. படர்க்கைப் பலவின்பால்:
பன்முறை யாஅம் பரந்தன வருஉம்
(தொல். சொல். (சேனா) 396)

2. 21 செய்யி+பால்விகுதி வாய்பாட்டு வினைகளும் இவ்வாறே இலக்கியங்களில் முற்றெச்சங்களாகப் பயின்று வழங்குகின்றன.

16. கோடேந்து அல்குல் தழையணிந்து உம்மொடு
ஆடினம் வருதலின் இனியதும் உண்டோ
((நற்றிணை 368-34)

17. நின்னுங்கு வருஉம்என் நெஞ்சினை
என்னுங்கு வாராது ஓம்பினை கொண்மே (கலி 23. 18-19)

18. தறுகட் பன்றி நோக்கிக் கானவன்
குறுகினன் தொகுத்த கூர்வாய்ப் பகழி (அகம். 248. 6-7)

19. இயலினள் ஒல்கினள் ஆடும் மடமகள்
(பதிற்றுப்பத்து 51. 10)

20. வெண்ணெல் அரிநர் மாற்றினர் அறுக்கும்
(ஐங்குறுநூறு 190)

2. 3 செய்கு வாய்பாட்டு முற்றெச்சம்: சங்க இலக்கியங்களில் செய்கு வாய்பாட்டு வினைகள் தன்மை ஒருமைப் பெயரை எழுவாயாக ஏற்று நடைபெறுகின்றன.

21. இன்னும் வாரார் இனியென் செய்கு (அகம் 177-2)

22. நாடன் என்கோ ஊரன் என்கோ
பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ
யாங்ஙனம் மொழிகோ ஓங்குவாட் கோதையை
(புறம். 49. 1-3)

23\. அன்னை வினவினளாயின் அன்னோ
என்னெனஉரைக்கோ யானே. (அகம். 358. 10-11)

செய்கு வாப்பாட்டு வினைகள் எச்சப்பொருண்மை உணர்த்து மாற்றை

செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர் (சொல். (சேனா) 204)

என்ற நூற்பாவில் புலப்படுத்துகிறார் தொல்காப்பியர். பொதுவாக எதிர்காலத்தைக் குறிக்கும் செய்கு வாய்பாட்டு வினைகள் எச்சமாக வழங்கும்போது தன்மை ஒருமைப் பெயரைத் தழுவி நின்று நோக்கம் கருதிய எச்சப்பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன.

24\. காண்கு வந்திசிற் பெரும! (புறம். 17-33)

25\. வள்ளியை என்றலின் காண்கு வந்திசினே
(பதிற்றுப்பத்து 54. 1)

செய்கு வாய்பாட்டு வினைகள் எச்சப்பொருண்மையை உணர்த்தும் போது, பிறிதோர் எச்சப் பொருண்மையை உணர்த்தும் முற்று வினையைத் தொடர்தலும் உண்டு.

26\. கண்டனென் செல்கு வந்தனென் (பதிற்றுப்பத்து 76. 9)
இவற்றின் அகத்தோற்றங்களைக் கீழே காணலாம்.

24 அ. [(*யான்) [(*யான்) காண்கு] வந்திசிற்பெரும]
பு. தொ அ. தொ அ.தொ பு. தொ

25 அ. [(*யான்) [(*யான்) காண்கு] வள்ளியை என்றலின்
பு. தொ அ. தொ அ. தொ
வந்திசின்]
பு. தொ

26 அ. [(*யான்) [(*யான்) கண்டனென் செல்கு]
பு. தொ : அ.தொ அ.தொ
வந்தனென்]
பு.தொ

2\. 4 செய்கு+பால்விகுதி வாய்பாட்டு முற்றெச்சம்: தன்மைப் பன்மையை உணர்த்தும் அம் விகுதியை ஏற்று, செய்கு வாய்பாட்டு வினைகள் நோக்கம் கருதிய முற்றெச்சங்களாக இலக்கியங்களில் பயின்று வழங்குகின்றன. அங்ஙனம் முற்றெச்சமாக நிற்கும் அவை தன்மைப் பன்மைப் பெயரைத் தழுவி நிற்கின்றன.

27\. பைங்குரல் படுகிளி கடிகம் சேறும் (குறுந்தொகை 198-5)

28. கூழைக் கெருமண் கொணர்கம் சேறும் (ஷ 113-5)

29. செல்லல் தீர்க்கம் செல்வாம் (நற்றிணை 284-4)

இத்தொடர்களின் உள் அமைப்பு (Deep structure) பின்வருமாறு அமையும்.

27 அ. [(*யாம்) [(யாம்) பைங்குரல் படுகிளி கடிகம்] சேறும்]
புு. தொ   அ தொ   அ. தொ   பு.தொ

28 அ. [(*யாம்) [(*யாம்) கூழைக்கு எருமண் கொணர்கம்]
பு. தொ   அ. தொ   அ. தொ
சேறும்]
பு. தொ

29 அ [(*யாம்) [(*யாம்) செல்லல் திர்க்கம்] செல்வாம்]
பு தொ   அ. தொ   அ. தொ   பு தொ

2.5 **செய்பு வாய்பாட்டு முற்றெச்சம்:** செய்து, செய்கு வாய்பாட்டு வினைகள் பயனிலைகளாக வழங்கும் செய்தியைக் குறிக்கும் தொல்காப்பியர், செய்பு வாய்பாட்டு வினைகள் எச்சமாக வழங்குவதை மட்டுமே குறிப்பிடுகிறார் (சொல் (சேனு) 227). செய்து, செய்கு வாய்பாட்டு வினைகள் சங்க இலக்கியங்களில் பயனிலைகளாகவும் வழங்கும் நிலையை நோக்கும் போது, செய்பு வாய்பாட்டு வினைகளும் வரலாற்று நிலையில் பயனிலையாகவும் செயல்பட்டிருக்கக் கூடும் என்றே கருதத் தோன்றுகிறது. இதை அரண் செய்யும் வகையில் பின்னல் தொடரன் களின் உள் அமைப்பில் செய்பு வாய்பாட்டு வினைகள் ஒரோவழி பயனிலையாக நடைபெறும் நிலையும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.

30. மெய்புகு வன்ன கைகவர் முயக்கம் (அகம் 11-10)

31. நின்றுகாண் பன்ன நீண்மலை. (புறம் 211-3)

பெயர்த் தொடர் (Noun phrases) களாக அமைந்துள்ள இவ் இரு எடுத்துக் காட்டுக்களின் உள் அமைப்பைக் கீழே காணலாம்.

30 அ. [(*அது) [மெய் *புகுபு] அன்ன கைகவர் முழக்கம்]
பு. தொ   அ. தொ   அ. தொ   பு. தொ

31 அ. [(*அது) [நீண்மலை நின்று காண்பு] அன்ன நீண்மலை.
பு. தொ   அ. தொ   அ. தொ.   பு. தொ

பெயர்த்தொடர்களில் அமைந்துள்ள அகத்தொடரன்களில் *புகுபு,[1]

---

1 * புகுபு என்ற வினையின் ஈற்றில் நின்ற பகரம் வகரமாகத் திரிந்ததென இங்குக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கண்பு ஆகிய இரு செய்பு வாய்பாட்டு வினைகளும் பயனிலையாகச் செயல்படுவதைக் காணலாம். செய்து மற்றும் செய்கு வாய்பாட்டு வினைகளைப்போலவே, செய்பு வாய்பாட்டு வினைகளும் தொடக்கத்தில் பயனிலையாக வழங்கின என்பதற்கு இவ் அகத் தொடரன்களைச் சான்றுகக் கொள்ளலாம். பயனிலையாக வழங்கிய நிலையில், செய்பு வாய்பாட்டு வினைகள் எச்சப்பொருண்மையை முற்றெச்சமாகவும் நின்றன எனக் கருதலாம். தொல்காப்பியர் காலத்தில் அவை தனித்தொடரன்(Simple Sentences) களில் பயனிலையாக அமையும் நிலையை இழந்தனவாதல் வேண்டும்.

2·6 செய்பு+பால் விகுதி வாய்பாட்டு முற்றெச்சம்: இருவகை எச்சப் பொருண்மையை உணர்த்தும் நிலையை இவ்வாய்பாட்டு வினைகளில் காணலாம். பகுதி செய்குபு என்ற வாய்பாட்டில் அமைந்து, சாரியை கொள்ளாமல் நேரடியாக விகுதியை ஏற்கும் வினைகள் முற்றெச்சமாக வழங்கும்போது செயவென் எச்சப்பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன.

32 யாமே, நின்னுநின் மலையும் பாடிப் பன்னாள்
சிறுதினை காக்குவஞ் சேறும்......(நற்றிணை 156 4-5)

43. ஒலி சினை வேங்கை கொய்குவம் சென்றுழி (அகம் 48-6)

பகுதி செய்பு வாய்பாட்டில் அமைந்து சாரியை பெற்று விகுதி ஏற்கும் வினைகள், முற்றெச்சமாக வழங்கும்போது செய்து வாய்பாட்டு வினைகள் உணர்த்தும் எச்சப்பொருண்மையை உணர்த்திநிற்கின்றன.

34, நடுங்குவனம் எழுந்து நல்லடி தளர்ந்தியாம் (பத்துப் பாட்டு 8.133)

35. ஈரிதழ் மழைக்கட் பேரிய லரிவை
....
கொல்புனற் றளிரின் நடுங்குவனள் நின்று (பதிற்றுப்பத்து 52. 18&21)

36. நன்னர் மாக்கள் விழைவனர் ஆய்ந்த
தொல்நலம் இழந்த துயரமொடு......(அகம் 197.3-4)

37. பெருங்களிறு மிதித்த அடியகத்து இரும்புலி
ஒதுங்குவன கழிந்த செதும்பல் ஈர்வழி (அகம் 155.11-12)

மேல் எடுத்துக் காட்டுக்களில் எச்சப்பொருண்மையை உணர்த்தும் நடுங்குவனம், நடுங்குவனள், விழைவனர், ஒதுங்குவன ஆகியவினைகளை முறையே *நடுங்குபு (▷ நடுங்குவு) + அன்-அம்/அள், *விழைபு

(▷ விழைவு) + அன்-அர், *ஒதுங்குபு (ஒதுங்குவு) + அன்-அ என ஆராயலாம். இதே போல் காக்குவம் (32,) கொய்குவம் (33) ஆகிய வினைகளையும் *காக்குபு (▷ காக்குவு) + அம், *கொய்குபு (▷ கொய்குவு) + அம் என ஆராயலாம் செய்குபு, செய்பு வாய்பாட்டு வினைகளின் ஈற்றில் நின்ற பகரமெய் வகரமெய்யாகத்திரிந்ததெனக்கருதலாம். மேற்குறித்த வினைகள் அனைத்தும் முற்றெச்சமாகச் செயல்படும்போது எழுவாயின் திணை, பால் எண், இடப்பொருண்மைகளுடன் ஒன்றி நடைபெறுகின்றன. இவ்வினைகள் அவைந்துள்ள தொடரன்களின் உள் அமைப்பைக் கீழே காணலாம்.

32 அ. [யாம் [யாம் சிறுதினை காக்குவம்] செறும்]
புதொ அ. தொ அ. தொ பு. தொ.

33 அ. [(*யாம்) [(*யாம்) ஒலிசினை வேங்கை [கொய்குவம்] சென்றுழி ..]
பு. தொ அ. தொ அ. தொ பு. தொ

34 அ. [யாம் [யாம் நடுங்குவனம்] எழுந்து...]
பு தொ அ. தொ அ. தொ பு. தொ

35 அ. [அரிவை [அரிவை நடுங்குவனள்] நின்று ...]
பு. தொ அ. தொ அ. தொ பு. தொ.

36 அ. [நன்னர்மாக்கள் [நன்னர்மாக்கள் விழைவனர்] ஆய்ந்த .]
பு. தொ. அ. தொ. அ. தொ. பு. தொ

37 அ. [இரும்புலி [இரும்புலி ஒதுங்குவன] கழிந்த .....]
பு. தொ. அ. தொ. அ. தொ. பு. தொ.

2·7 **செய்ம்மார் வாய்பாட்டு முற்றெச்சம்:** வரலாற்று நிலையில் செய்ம்மார் வாய்பாட்டு வினைகள் செய் + உம் + ஆர் என்ற அமைப்பைக் கொண்டவையாகும்.[1] தொல்காப்பியர் இவற்றை மார் ஈற்றுப் பலர் பால் வினைமுற்றுக்களாகக்கொண்டு (சொல் (சேனா) 7), அவை முற்றெச்சங்களாகவும் வழங்கவல்லன என்பதை

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காளக் கிளவியொடு முடியும் என்ப (சொல் (சேனா) 207)

என்ற நூற்பாவில் உணர்த்திச் செல்கிறார். எச்சமாக வழங்கும்போது மார் ஈற்று வினைகள் சங்கஇலக்கியங்களில் பொதுவாக நோக்கம் கருதிய எச்சப் பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன. அங்ஙனம் எச்சமாக

1. இரண்டு தமிழ் விகுதிகளின் தோற்றம் — இரா. கோதண்டராமன், தமிழ்ப் பொழில், துணர் 44, இதழ் 8.

அமையுங்கால் அவை பலர்பால் படர்க்கைப் பெயரைத் தழுவிச் செல்கின்றன. ஒரோவழி இதற்குப் புறநடையாக அமையும் இடங்களும் இலக்கியங்களில் உண்டு [1]

2·8 செய்யும் வாய்பாட்டு முற்றெச்சம்: ஏனைய வாய்பாட்டு வினைகள், வினையெச்சப் பொருண்மையை உணர்த்தி நிற்க, செய்யும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள் மட்டும் எச்சமாக நிகழும்போது பெயரெச்சப் பொருண்மையைக் குறித்து நிற்கின்றன. செய்யும் வாய்பாட்டு வினைகள் பயனிலையாக வழங்கும்போது பல்லோர் படர்க்கை, முன்னிலை' தன்மை ஆகிய இடப்பெயர்களை எழுவாயாகக் கொள்ளாது என்பதை

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்து
செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா (சொல் (சேனா) 227)

எனக் குறிக்கின்றார் தொல்காப்பியர். மலையாளத்தில் செய்யும் வாய்பாட்டு வினைகள் பயனிலையாகச் செயல்படும்போது இருதிணை ஐம்பால் மூவிடப் பெயர்களை எழுவாயாக ஏற்று நிற்கின்றன. தமிழில் எச்சப் பொருண்மையை உணர்த்தும்போது இவ்வாய்பாட்டு வினைகளுடன் எல்லாப் பெயர்களும் எஞ்சி நிற்கின்றன. இதை அகச் சான்றாகவும் மலையாளத்தில் காணப்படும் நிலையை ஒப்பியல் சான்றாகவும் கொண்டால், செய்யும் வாய்பாட்டு வினைகள் தொடக்கத்தில் எல்லாப் பெயர்களோடும் பயனிலையாக நின்று வழங்கின எனக் கருதலாம்.

2.81 செய்யும் வாய்பாட்டு வினைகள் பெயரெச்சங்களாக நிகழ்வதை நோக்கும்போது பால் விகுதி ஏற்ற ஏனைய தெரிநிலை வினைமுற்றுங்களும் தொடக்கத்தில் பெயரெச்சங்களாக வழங்கியிருக்கக் கூடுமோ என்று ஐயுறத்தோன்றுகிறது. இந்தப்போக்கில் மேற்கொண்டு சிந்திக்கத் தூண்டும் வகையில், ராம சரிதம் என்னும் பழைய மலையாள இலக்கியத்தில்,

சிவந்தன மிழிகளோடும் 'சிவந்த விழிகளோடும்'
பெய்தன கண்ணீரோடும் 'பெய்த கண்ணீரோடும்'
இட்டன சாபம் 'இட்ட சாபம்'
வளர்ந்தன சில்லியோடு 'வளர்ந்த புருவத்தோடு

---

1. மார் ஈற்று வினைகள்—மோ. இசரயேல். செந்தமிழ்-தொகுதி 66, பகுதி 2.

எனவழங்கும் தொடர்களில் வினைமுற்றுக்கள் பெயரெச்சங்களாக நடைபெறுவதைக் காணலாம்[1]

29 செயல் வாய்பாட்டு முற்றெச்சம்: செயல் வாய்பாட்டு வினைகள் பயனிலையாக நிற்குங்கால் ஏவல் கண்ணிய வியங்கோட்பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன. தொல்காப்பிய நூற்பாக்களில் இந்நிலை பெருவாரியாகவும், சங்க இலக்கியங்களில் அருகியும் காணப்படுகின்றது

38. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (தொல். எழுத்து (இளம்)15)

39. செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல் (தொல். சொல்) (சேனா) 20)

40. அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல் (ஷை 442)

41. அறவை யாயின் நினதெனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல் (புறம் 44.11-12)

இவ் எடுத்துக்காட்டுக்களில் நிலையல், கூறல், கிளத்தல், திறத்தல் ஆகிய செயல் வாய்பாட்டு வினைகள் பயனிலைகளாக நின்று செயல்படுவதைக் காணலாம். இனி இவை எச்சமாக நிகழும்போது பெரும்பாலும் வேண்டும் என்னும் செய்யும் வாய்பாட்டு வினை இவற்றைத் தொடர்கின்றது[2]

42. ஆற்றுப்படை மருங்கில் போற்றல் வேண்டும் (தொல். சொல். (சேனா) 462)

43. மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும் (ஷை 240)

44. குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும் (தொல். எழுத்து (இளம்) 34)

---

1. The Evolution of Malayalam Morphology. (பக்கம் 82) L. V. Ramaswamy Iyer.
2. பொதுவாக, வேண்டும் என்ற வினை குறைவினை (Defective Verb) யாகவே கொள்ளப்படுகிறது. ஆனால் அது இங்கு முற்று வினையாகக் கொள்ளப்பட்டு எழுவாய் கெட்டு நிற்கும் நிறைவினையாகவே கருதப்படுகிறது. வேண்டும் என்ற வினை வரலாற்று நிலையில் நிறைவினையாகவே பயின்று வழங்கியிருக்க வேண்டும். வேண்டு என்னும் வினையடி உணர்த்தும் பொருளையே வேண்டும் என்ற வினையும் உணர்த்துவதாகக் கருதலாம்.

இம்மூன்று தொடரன்களின் உள் அமைப்பும் கீழே தரப்படுகின்றது.

42 அ. [பு. தொ. எ. [அ. தொ. எ. ஆற்றுப்படை மருங்கில்
பு. தொ. அ. தொ.
போற்றல்] வேண்டும்]
அ. தொ. பு. தொ.

43 அ. [பு. தொ. எ. [அ. தொ. எ. மெய்ந்நிலைப் பொதுச்சொல்
பு. தொ. அ. தொ.
கிளத்தல்] வேண்டும்]
அ. தொ. பு. தொ.

44 அ. [பு. தொ. எ. [குற்றியலிகரம் நிற்றல்] வேண்டும்]
பு. தொ. அ. தொ. அ. தொ. பு. தொ.

செயல் வாய்பாட்டு வினைகள் அகத்தொடரன்களின் பயனிலையாகவும், விழைவுப் பொருண்மையை உணர்த்தும் வேண்டும் என்னும் செய்யும் வாய்பாட்டுவினை புறத்தொடரன்களின் பயனிலையாகவும் அமைந்தியல் வதை மேலே காணலாம். எழுவாய் குறிக்கப்பெறாமல் பு. தொ. எ. (புறத்தொடரன் எழுவாய்), அ. தொ. எ. (அகத்தொடரன் எழுவாய்) எனக் குறிக்கப்பெற்றிருக்கும் இடங்களில் தகுந்த எழுவாயை அமைத்துக்கொண்டால் பொருள் சிறந்து விளங்கும்.

2·91. செய்தல் வாய்பாட்டு முற்றெச்சம்: செய்தல் வாய்பாட்டு வினைகள், செயல் வாய்பாட்டு வினைகளினின்றும் பயனிலைப் பொருண்மையையோ அல்லது எச்சப் பொருண்மையையோ உணர்த்தும் வகையில் மாறுபட்டு இயல்வதாகத் தெரியவில்லை. செயல் வாய்பாட்டு வினைகளினின்றும் செய்தல் வாய்பாட்டு வினைகள் வடிவில் (Form) மாறுபடுவதால் அவை இங்குத் தனியாகக் குறிக்கப்பெறுகின்றன.

45. உரையிடத் தியலும் உடனிலை அறிதல் (தொல். சொல் (சேனா 458)

46. குறைச்சொல் கிளவி குறைக்கும் வழி அறிதல் (ஷை 453)

47. பாங்குற உணர்தல் என்மனார் புலவர் (ஷை 396)

மேல் எடுத்துக்காட்டுக்களில் அறிதல், உணர்தல் ஆகிய வினைகள் ஏவல் கண்ணியவியங்கோட்பொருண்மையை உணர்த்திப்பயனிலையாகச் செயல்படுகின்றன. பின்வரும் தொடரன்களில் செய்தல் வாய்பாட்டு வினைகள் முற்றெச்சமாக வழங்குவதைக்காணலாம்.

48. ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும் (தொல். எழுத்து (இளம்)115)

49. ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும் (ஷ் 189)

50. .... இடும்பை
பெரிதல் அம்ம இவட்கே அதனல்
மாலை வருதல் வேண்டும் (அகம் 148.10-12)

இத்தொடரன்களின் உள் அமைப்பைக் கீழே காணலாம்.

48அ. [பு. தொ. எ [ஒற்று ஒல்வழி இடை மிகுதல்]
பு. தொ அ. தொ அ. தொ
வேண்டும்]
பு. தொ.

49அ. [பு. தொ. எ (யகரமெய் ஆவயின் கெடுதல்] வேண்டும்]
பு. தொ அ. தொ அ. தொ பு. தொ

50அ. [*யான்) [(*நீ) மாலை வருதல்] வேண்டும்]
பு. தொ அ. தொ அ. தொ பு. தொ

தெரிநிலை 'வினைகள் வினையாலணையும் பெயர்களாக அமைவதுபோல், செயல், செய்தல் வாய்பாட்டுவினைகள் தொழிற்பெயர்களாக அமைந்தியல்கின்றன. எனவே இவ்வாய்பாட்டு வினைகளின் விகுதிகளைத் தொழிற்பெயர் விகுதிகளாகக் கொள்ளாமல், விழைவுப்பொருண்மையை உணர்த்தும் வியங்கோள் விகுதிகளாகக்கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது. மேல் எடுத்துக்காட்டுக்கள் (38-41&45-47) அனைத்தும் இம்முடிபுக்கு அரண்செய்வனவாக அமைந்துள்ளதைக் காணலாம்.

2.10 செய்யியர் வாய்பாடடு முற்றெச்சம்: சங்க இலக்கியங்களில் செய்யியர் வாய்பாட்டு வினைகள் பயனிலையாக வழங்கும்போது வியங்கோட் பொருண்மையையும், எச்சமாக நிகழும் போது செயவென் எச்சப்பொருண்மையையும் உணர்த்தி நிற்கின்றன.

51. நின்று நிலை இயர் நின் நாள்மீன் நில்லாது
படாஅச் செலீ இயர் நின் பகைவர் மீனே (புறம் 24-24-25)

52. தெற்றென இறீ இயரோ ஐய மற்றியாம்
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே (குறுந்தொகை169-2-3)

53. வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீ இயர்—(ஷ் 75-3-4)

54. களிறுபெறு வல்சிப் பாணன் எறியும்
தண்ணுமைக் கண்ணின் அலை இயர்தன் வயிறே (அகம் 106. 12-13)

55. ஈண்டுச் செய் நல்வினை யாண்டுச் சென் றுணீ இயர்
உயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தனன்-(புறம் 174-19-20)

இவ் எடுத்துக் காட்டுக்களில் நிலை இயர், செலீ இயர், இறீ இயர், பெறீ இயர், அலை இயர், உணீ இயர் ஆகிய செய்யியர் வாய்பாட்டு வினைகள் பயனிலைகளாக நடைபெறுகின்றன. பின் வரும் தொடரன் களில் இவ் வாய்பாட்டு வினைகள் முற்றெச்சமாக அமைவதைக் காண லாம்.

56. ஈரிதழ் மழைக்கட் பேரிய லரிவை
....
எறியர் ஒக்கிய சிறுசெங் குவளை (பதிற்றுப்பத்து 52.18&22)

57. கயந்தலை மடப்பிடி உயங்குபசி களை இயர்
பெருங்களிறு தொலைத்த முடத்தாள் ஓமை (நற்றிணை 137. 7-8)

58. செவ்வாய்ப் பாசினம் கடீ இயர் கொடிச்சி
அவ்வாய்த் தட்டையோடு அவணை யாகி (ஷை 134. 4-5)

59. பசலை உணீ இயர் வேண்டும்
திதலை யல்குலென் மாமைக் கவினே (குறுந்தொகை 27.4-5)

60. எந்தையும் கொடீஇயர் வேண்டும் (ஷை 51.3-5)

61. வயல்வெள் ளாம்பல் உருவ நெறித்தழை
ஐதகல் அல்குல் அணிபெறத் தைஇ
விழவிற் செலீ இயர் வேண்டும்- (நற்றிணை 390.4-6)

மேல் எடுத்துக்காட்டுக்களின் உள் அமைப்பைக் கீழ்வருமாறு ஆராய லாம்.

26அ [அரிவை [அரிவை சிறு செங்குவளை எறியர்] ஒக்கிய
பு. தொ அ. தொ அ. தொ
சிறுசெங்குவளை]
பு தொ

57அ. [பெருங்களிறு [பெருங்களிறு கயந்தலை மடப்பிடி உயங்கு பசி
பு. தொ அ. தொ
களை இயர்] தொலைத்த முடத்தாள் ஓமை]
அ. தொ பு. தொ

58அ. [கொடிச்சி (*நீ) [கொடிச்சி (*நீ) செவ்வாய்ப் பாசினம்
பு. தொ அ. தொ

கடீஇயர்] அவ்வாய்த் தட்டையொடு அவணையாகு]
அ. தொ புு. தொ

59அ. [பசலை [பசலை ;திதலையல்குலென் மாமைக்கவின் உணீ இயர்]
பு. தொ அ. தொ அ. தொ

திதலையல்குல் என் மாமைக்கவின் வேண்டும்]
பு தொ

60அ. [எந்தை(யும்) [எந்தை(யும்) கொடீஇயர்] வேண்டும்]
பு. தொ அ. தொ அ. தொ பு. தொ

61அ. [(*யான்) [(*யான்) விழவிற் செலீஇயர்] வேண்டும்]
பு. தொ அ. தொ அ. தொ பு தொ

செய்யியர் வாய்பாட்டு வினைகள் பயனிலையாக நிற்கும் போது வியங்கோட்பொருண்மையை உணர்த்தும் என்று முன்னர்க் குறித்தோம். ஆனால் மேற்கண்ட அகத்தொடரன்களில் பயனிலைகளாக நிற்கும் எல்லா வினைகளும் இப்பொருண்மையைக் குறிப்பனவாகத் தோன்றவில்லை. பொதுவாக, செய்யியர் வாய்பாட்டு வினைகளை விழைவுப் பொருண்மையை உணர்த்தும் வினைகளாகக் கருதலாம்.

3.0 இக்கட்டுரையில் பத்துவகை வினைமுற்றுக்கள் முற்றெச்சங்களாக வழங்கும் தன்மை குறித்து ஆராயப்பட்டிருக்கின்றது. இனி செய்து செய்பு வாய்பாட்டு வினைகளைப் போல் எச்சப் பொருண்மையை உணர்த்தும் செய்யூ வாய்பாட்டு வினைகள், நோக்கம் கருதிய எச்சப் பொருண்மையை உணர்த்தும் செய மற்றும் செய்யிய வாய்பாட்டு வினைகள், நிபந்தனைப் பொருண்மையை உணர்த்தும் செயின் மற்றும் செய்தால் வாய்பாட்டு வினைகள் ஆகியவை பற்றி இங்கு மேலோட்டமாக ஆராயலாம்.

3.1. செய்யூ வாய்பாட்டு வினைகளை வினையெச்சங்களுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். பழைய மலையாள இலக்கியங்களில் இவ்வாய்பாட்டு வினைகள் எதிர்காலப் பொருண்மையை உணர்த்தும் முற்று வினைகளாக நடைபெறுகின்றன.[1] தெலிங்கில் சேஸ்து (ce:stu) வாய்பாட்டு வினைகள் தன்மை ஒருமையிலும், சேஸு (ce:su) வாய்பாட்டு வினைகள் படர்க்கை ஒருமையிலும் நின்று எதிர்காலமாகவழங்கு

1. The Evolution of Malayalam Morphology.–L. V. Ramaswamy Iyer. (பக்கம் 70-72)

கின்றன.[2] இவ் ஒப்பியல் சான்றுகளைக் கருத்தில் கொண்டு நோக்கும் போது செய்யூ வாய்பாட்டுவினைகளும் தொடக்கத்தில் எதிர்கால முற்று வினைகளாக வழங்கியிருக்கலாம் என்று கருதத் தோன்றுகின்றது. இவ் அடிப்படையில் செய்யூவாய்பாட்டு வினைகளை வரலாற்று முற்றெச்சங் களாகக் கொள்ளலாம்.

3.2. செய்யூ வாய்பாட்டு வினைகளைப் போலவே செய, செய்யிய வாய்பாட்டு வினைகளையும் எச்ச வினைகளாகக் குறிக்கிறார் தொல்காப்பி யர். இவ் இரு வாய்பாட்டு வினைகளும் பயனிலையாக நிற்கும்போது வியங் கோட் பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன.

62. ஒன்னார் செகுப்பினும் செகுக்க! (புறம் 57.9)

63. இன்னே வருகுவன் ஒழிக்க அவற் கிடமே! (புறம் 216.12)

64. எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே! (புறம் 187-3-4)

தமிழில் வியங்கோட் பொருண்மையை உணர்த்தும் செய்க வாய்பாட்டு வினைகள் நீலகிரியில் வழங்கும் இருளமொழியில் செயவென் எச்சப் பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன. எடுத்துக்காட்டாக ஆடுக, பாடுக, வருக ஆகிய வினைகள் இருளமொழியில் எச்ச வினைகளாகவே வழங்குகின்றன.[3] எனவே செய, செய்யிய வாய்பாட்டு வினைகள் பயனிலையாக வழங்கும் போது வியங்கோட்பொருண்மையையும், முற் றெச்சங்களாக நிற்கும் போது நோக்கம் கருதிய எச்சப்பொருண்மை யையும் உணர்த்துவனவாகக் கருதலாம்.

3.3. நிபந்தனைப்பொருண்மையை உணர்த்தி எச்சமாக நிகழும் செயின், செய்தால் வாய்பாட்டு வினைகள் பயனிலைகளாக வழங்கினவா என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிட முடியவில்லை. ஆயினும் இக் கட்டுரையில் குறிக்கப்பெற்ற ஏனைய வாய்பாட்டு வினைகள் எச்சங் களாக மட்டுமன்றிப் பயனிலைகளாகவும் வழங்கும் நிலையை நோக்கும் போது செயின், செய்தால் வாய்பாட்டு வினைகளும் பயனிலைகளாகவும் வழங்கியிருக்கக் கூடுமோ என்று ஐயுறத்தோன்றுகிறது. இதை அரண் செய்யும் வகையில் மலையாளத்தில் வரின், செய்யின், சிரிக்கின்,

---

2. இக்கட்டுரையாளரின் தாய்மொழியில் இந்நிலை காணப்படு கிறது.

3. Field Notes on Irula Language Collected by Mr. S.Periyalwar M. A., Research Scholar, Dept of Linguistics, Annamalai University.

உறங்கின், காணின், பாடின், நோக்கின், என செயின் வாய்பாட்டு வினைகள் எழுவாயாகநின்று பன்மை ஏவற்பொருண்மையை உணர்த்தி நிற்பது நோக்கற்பாலது. இதன் அடிப்படையில் செயின் வாய்பாட்டு வினைகளை வரலாற்று முற்றெச்சங்களாகக் கருதலாம். செய்தால் வாய்பாட்டுவினைகளின் பயனிலை நிகழ்ச்சியைக் குறித்து ஏதுங்குறிப்பாகச் சொல்லமுடியவில்லை.

**இக்கட்டுரையில் படர்க்கை விகுதிகளையும், தன்மை, முன்னிலை விகுதிகளையும் ஒருங்கே குறிக்கும் ஒரு பொதுக்குறியீடாக, பால்விகுதி என்னும் தொடர் ஆளப்பெற்றிருக்கிறது.

இருளமொழியில் செய்க வாய்பாட்டு வினைகள் செயவென் எச்சப் பொருண்மையை உணர்த்தும் செய்தி நண்பர் திரு, ஆர். பெரியாழ்வார் எம். ஏ. அவர்கள் மூலம் பெறப்பட்டது. மலையாள மொழியில் செயின் வாய்பாட்டு வினைகள் பன்மை ஏவற்பொருண்மையை உணர்த்தும் செய்தி அண்ணாமலைப் பல்கலைக்கழமொழியியல்துறையைச் சேர்ந்த நண்பர் திரு, T. B. வேணுகோபால பணிக்கர் எம். ஏ. (மலையாளம்), எம். ஏ. (மொழியியல்) அவர்கள் மூலம் அறியப்பட்டது. நண்பர்கள் இருவருக்கும் இக்கட்டுரையாளர் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறார்.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

காப்பிய மகள் மாதவி

இரா. சக்திதேவி, M. A.,

விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

அன்புநிறை நெஞ்சம் பொறுமை கொள்ளவே செய்யும். கோவலன் கண்ணகியை நினைத்திருப்பான் எனும் எண்ணம் மாதவிக்கு இங்குத் தோன்றவே இல்லை. அவன் பல்லாண்டுகள் கற்பின் செல்வியை மறந்திருந்ததால், தான், அவனுடைய மனைவி எனும் உரிமையொடு வாழ்ந்ததால், தனக்கு வாழ்வளித்திருக்கும் கண்ணகியைப் பற்றிய நினைப்பு எழவில்லை. ஆயின் அவள் கண்ணகிபாற் கொண்டிருந்த பெருமதிப்பு பின்னர் அவள் கடிதத்தின் மூலம் வெளியாகின்றது. 'கன்னி தன்னைப் புணர்ந்தாலும்' கோவலனைத் தான் புலவா தொழிதல் வேண்டும் என்னும் பொருள் கொண்டு, அவன் மற்றொரு புதிய பெண்ணின் மீது காதல் கொண்டனன் போலும் என எண்ணித் தடுமாறுகின்றாள். மேலும், காவிரி சீர்மையுடன், பெருமிதத்துடன் நடந்து செல்வது, சோழன் தந்த வளத்தால் என்றவுடன், தான் அவன் செல்வ நிழலில் வாழும் வாழ்வைக் குறிப்பது போற் பொருட்கொள்கின்றாள்.

'விழவ ரோதை சிறந்தார்ப்ப
　　நடந்த வெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன்
　　வளனே வாழி காவேரி'

என்றே கோவலன் பாடுகின்றான். ஆகவே, அவள் போட்டி மனப்பான்மையொடு, விளையாட்டு நோக்கமோடு உரிமை வேட்கையுடன்பாடும் ஆற்றுவரிப் பாடலில் காவேரி செம்மாந்து நடப்பது, அவள் கணவனின் செங்கோல் வளையாத பெருமிதத்தா லன்றோ எனப்பாடுகின்றாள். கணவன் நன்னெறியில் நிற்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்துகின்றாள். அவன் புகழொளியில் தானே மனைவி விளக்கம் பெறவியலும்.

'கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழிகாவேரி'

என்று வாழ்த்திப் பாடுகின்றாள்.

கோவலன் ஆற்றுவரிக்குப் பின்பாடிய சார்த்துவரி, முகமில்வரி, இணைநிலைவரிப் பாடல்களில் காமக்களிப்புடன் கூடிய காதலுணர்வு களை இசையிற் பிழிந்து தருகின்றான்.

"கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கண்ஏர் வானத்து அரவஞ்சி வாழ்வதுவே"

என்று அவள் உருவழகில் ஈடுபட்டும்;

"கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் நீயும்
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக் கிடுகும் இடைஇழவல் கண்டாய்"

என்று தன்னெஞ்சில் மேலோங்கி நிற்கும் காதலுணர்வையும் எடுத்தி யம்பிப் பாடுகின்றான். கோவலன் இவ்வாறெல்லாம் பாடியது, தன் இளமையிற் கண்ணகியுடன் கொண்ட களவு வாழ்வை உன்னி, அவளை நினைந்துருகிப் பாடினான் என்று பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந் தரனார் கருத்துக் கொள்கிறாரென்றாலும், அதனை வலியுறுத்துவதற்குக் காப்பியத்தில் தக்க சான்றுகள் இல்லை எனலாம் இருபெருங் குரவரும் மணவணி காண மகிழ்ந்ததனால் திருமணம் கோவலனுக்கு நடந்ததா கவே ஆசிரியர் அமைத்துக் காட்டுகின்றார். கோவலன் தன் பாட்டின் இறுதியில்

'சேரல் மடவன்னம் சேரல் நடையொவ்வாய்
ஊர்திரைநீர் வேலி வழக்கித் திரிவாள்பின்
சேரல் மடவன்னம் சேரல் நடையொவ்வாய்"

என்று கூறியதும், மாதவி தன்னை அன்னமாகவும், அவளை அவன்தன் காதலியி னருகில் நெருங்கத் தகுதியற்றவளாய் விலக்குவதாகவும் நினைந்து மனம் நோவடைகின்றாள். மாதவி அருகிருக்க, ஒருபெண்ணை உருவகப்படுத்தி அவளழகில் உருகிப் பாடியதும், இயற்கையாக அமைந்த பெண்ணின் மெல்லியல் நெஞ்சம் புண்ணடைகின்றது. காதல்நிறை உள்ளத்தள் தன் கணவன் பிறிதொரு பெண்ணைக் கனவிலும் நினைக்க விட்டுக் கொடுக்கமாட்டாள். ஆகவே கோவலனுடன் ஈண்டு மாதவி ஊடல் கொண்டது தவறெனின், அது பெண்மையின் தவறென்றே கூறுவதாக முடியும்.

கோவலன் ஒரு பெண்ணை நெஞ்சத்திற்கொண்டானெனும் குறிப்பு அவன் பாடலில் அடங்கியிருந்ததாக மாதவி நினைக்கின்றாள்.

மன்னுமோர் குறிப்புண்டிவன் றன்னிலை மயங்கினனெனக்
கல்வியான் மகிழ்ந்தாள்போற் புலவியால் யாழ்வாங்கித்
தானுமோர் குறிப்பினள்போற் கானல்வரிப் பாடல்

இசைக்கத்தொடங்குகின்றாள். ஆடவன் வேறொருபெண்ணை நினைப்பது புறத்தொழுக்கங் கொள்வது மரபுநெறிப்படி தவறில்லை. ஆயின் ஒரு பெண் மற்றொரு ஆடவனை நெஞ்சில் நினைத்ததாக அமைத்துப் பாடுவது அந்நாளில் இருந்த பழக்கமில்லை என்றாலும் மிகப்பெருந் தவறு என்று வாதாடுவது பொருத்தமற்றதாகத் தோன்றுகின்றது. காலம் எவ்வளவோ மாறினும் மனித மனமும், உணர்ச்சியும், உரிமை வேட்கையும் என்பன யாவும் மாறுவதில்லை என்றே கொள்ளலாம். தவறு இரண்டு பேருக்கும் ஒத்தபங்குடையதே எனக் கொள்ள வேண்டியுளது. தலைவனின் காதல் மொழியால் களவு வாழ்வில் ஈடுபட்ட பெண்ணின் தோழி, வரைவு கடாயும் துன்பநிலையை விளக்கிப் பாடும் மாதவி கோவலன் பிரிவை முன்கூட்டியே உணர்ந்தாற் போல் உளம் வெதும், உள்ளுணர்வாக விழித்தெழும்படி அவலங்கலந்து நெஞ்சை உருக்கும் பாடல்களாக அமைத்துப் பாடுகின்றாள். கோவலன் பாடலால் மனமுடைந்த நெஞ்சத்தின் அவலம் அவள் இசையில் வெளியாகின்றது. முன்பு ஊடற் கோலங் கொண்ட கோவலனின் உளமாறுபாட்டை உணர்ந்திருந்த மாதவி, அவன் தன்னை விட்டுப் பிரிந்து விடுவானோ எனும் அச்சத்தால் அவன் பிரிவைத் தாங்க முடியா நிலையைத் தன் இசையில் வடித்துப் பாடுகின்றாள். ஆயின் கணிகையர் குலத்தள் எனும் எண்ணம் நெஞ்சத்தை உறுத்திக் கொண்டிருக்கக் கோவலன், அவள் தானருகிலிருக்கும் போதே மாற்றொருவன் பிரிவுத்துயரைப் பாடினள் என எண்ணங் கொண்டு அவளைப் பிரிகின்றான். அவள்நெஞ்சமுருகிப் பாடியதைக் குறிப்பிடவே ஆசிரியர்,

"நிலத்தெய்வம் வியப்பெய்த நீள்நிலத்தோர் மனமகிழக்
கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தாற் பாடத்தொடங்குமன்"

என்று முதலிலேயே உரைத்து விடுகின்றார்.

தலைவிக்கு வாழ்வளிக்கப் போவதாய் உறுதியளித்துச் சென்றவன் மீண்டும் வராமை கண்டவள் இரங்கிப் பாடுவதாக அமையும் நெய்தல் திணையில் உரிப்பொருளும், கருப்பொருளும் மிகச் சிறந்து மேம்பட்டு விளக்குகின்றன மாதவி அமைக்கும் பாடலில்,

"தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்றேரும்
எம்மை நினையாது விட்டாரே விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்"

எனும் பாடல் வரிகளே, கோவலனுக்கு மாதவியை மறக்காம லிருக்கச் செய்யப் போதிய உணர்வு தரத் தக்கனவாகும். ஐயமெனும் பேய் ஆட்டும்போது, காதலரின் எண்ணம் தெளிவற்றுப் போய் விடுகின்ற தெனலாம்.

"இளையிருள் பரந்ததுவே எற்செய்வோன் மறைந்தனனே
களைவரும் புலம்புநீர் கண்பொழீஇ உகுத்தனவே
தளையவிழ் மலர்க்குழலாய் தணந்தார்நாட் டுளதாங்கொல்
வளைநெகிழ எரிசிந்தி வந்தஇம் மருள்மாலை"

என்று மாலையொடு புலம்பும் காதலியின் துயர், கரைகாணாப் பெருங் கடலின் அலையோயா ஆழத்தைக் காட்டுகின்றது. கோவலனின் பாடல்கள், கலையுணர்வுடன் கூடி அமைந்திருக்க, மாதவியின் பாடலோ கலையுணர்வுடன் பண்பட்ட ஆழ்ந்த உணர்வின் எதிரொலியாகவும் அமைந்து கிடக்கக் காணலாம். கோவலன் பாடியதைப் போலவே இவளும்,

'அடையல் குருகே அடையலெங் கானல்'

என்று பாடுபவள், கோவலனின் சினமுற்ற முகத்தைக் கண்டு இசையை நிறுத்தி விடவில்லை. பிறப்பால் ஏற்பட்ட தாழ்வுணர்ச்சி சுட்டிக் காட்டப்பட்ட நிலையில் அடிபட்ட நெஞ்சத்தின் உணர்வுகளை யெல்லாங் கொட்டித் தீர்த்தபின்னரே தன்பாடலை நிறுத்துகின்றாள்.

"ஆங்கனம் பாடிய ஆயிழை பின்னரும்
காந்தள் மெல்விரற் கைக்கிளை சேர்குரல்
தீந்தொடைச் செவ்வழிப் பாலை இசை எழீஇப்
பாங்கினிற் பாடியோர் பண்ணுப் பெயர்த்தாள்"

என்று ஆசிரியரே இடையிற் கற்போர்க்குக் கூறி, அவள் கைக்கிளையில் பாடியதை உருக்கத்துடன் உணர்த்துகின்றார்.

"தீத்துழைஇ வந்தஇச் செல்லன் மருள்மாலை
தூங்காது துணிந்தஇத் துயரெஞ்சு கிளவியால்
பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடற் றெய்வநின் மலரடி வணங்குதும்"

என்று இன்னா செய்தார்க்கு இறைவனிடம் இரங்கி வேண்டினள்போல் முடிக்கின்றாள்.

இசை நுணுக்கத்தின் பொருட்செறிவை உணர்ந்திருந்த கோவலன் தன் தவறென்று எதையும் எண்ணவில்லை. பொருளற்ற நிலையில் தாழ்மையுணர்ச்சி மேலோங்க நிற்கின்றான். அவளை வெறுத்துக் கணிகையர் குலத்தவளே யாதலின் வேறொருவனை மனங்கொண்டாள் எனும் எண்ணம் மேலிட, அந்தக் கடற்கரைச் சோலையிலே அவளை விட்டகல்கின்றான்.

> ''கானல்வரி யான்பாடத் தானொன் றின்மேல் மனம்வைத்து
> மாயப்பொய் பலகூட்டி மாயத்தாள் பாடினளென''

அவன் நினைத்தாக அமைக்கின்றார் ஆசிரியர். அவர்களிடையே ஏற்பட்ட பிரிவு நிலைத்து விடுகின்றதென்றாலும், அவனுக்கு மாதவிமேல்ஏற்பட்ட மனக்கசப்பு உணர்ச்சிக் கொந்தளிப்பால் உண்டாயதொன்று என்பதை உணர்த்தும் வகையில்,

> ''யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினைவந் துருத்ததாகலின்
> உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை நெகிழ்ந்தவனாய்ப்
> பொழுதீங்கு கழிந்ததாகலின் எழுதும் என்றுடனெழாது
> ஏவலாள ருடன்சூழ்தரக் கோவலன்தான்''

பிரிந்ததாக அமைக்கின்றார் ஆசிரியர். இத்தனைக் காலமும் தனக்கென வாழ்ந்தாளை ஐயமுறும் நிலை ஆடவனின் பொருள் குறைந்த தாழ்வுணர்வின் மனப்போக்குத்தான் என்று நினைக்க வேண்டியுளது. பின்னர் அவன் மாதவி மீது கொண்ட ஐயந்தீர்ந்து தன்றீது என்றுணரும் நிலையும் அடைக்கலக் காதையில் தனக்கு மாதவியிடமாகப் பிறந்தமகள் மணிமேகலைக்குச் செய்த சிறப்பை நினைவுறுத்தும் நிலையும், தன் குடும்பத்தினளாக இணைந்த மாதவியின் அன்பையும், உணர்ச்சிக் கொந்தளிப்பற்ற நிலையில் கோவலனின் மென்மைமிகு கலைநெஞ்சம் உணர்ந்துருகுவதைக் கண்டறிய வியலுகின்றது.

கோவலன் பிரிந்ததும் துயர் தாளாது மக்களைக் காண நாணி தன்றுன்பத்தை மறைக்க வண்டியின் உள்புகுந்து தன்மனை யடைகின்றாள். வையமேறி வந்த மகிழ்ச்சியின்பின், விளையாட்டு வினையாகி முடிந்ததை எண்ணிக் குமுறுகின்றாள். மாதவி தன் கலையையும், கோவலனையும் வாழ்வின் இரு கண்களெனப் போற்றியவள். கோவலன் சினந்தணிந்து மீண்டும் வந்து விடுவான் என்றே நம்புகின்றது அவள் தூய நெஞ்சம். விலைமகள் என ஒதுக்கப்பட்ட விலையற்ற மாதவிஉண்மைநிலை உணரும் நிலை நெருங்குகின்றது. தன்னுயிருடன் வளர்ந்த கலையில் மனஞ் செலுத்தித் துன்பத்தை மறக்க முயலுகின்றாள்.

'அதிரா மரபின் யாழ்கை வாங்கி
மதுர கீதம் பாடினள் மயங்கி'

பகைநரம்பில் கைபட்டு யாழும் அவலஇசை எழுப்புகின்றது.

கோவலனின் பிரிவின் போது, கலையை மறவாது மேற்செம்பாலை யென்னும் பண்ணைக் கண்டத்தாற் பாடி மயங்கி, அப்பண்ணையே யாழினும் பாடினள். அவன் நிலையாகவே பிரிந்து, கண்ணகியுடன் ஊரின் நீங்கினன் என்று அறிந்த பின்னரே அவள் கலைவாழ்வும் நிலை குலைந்து போகின்றது. வாழ்வின் ஒருகண் பழுதுபட்டவுடன் மறுகண் ணும் பழுதடைகின்றது. கோவலன் இறந்த செய்தி கேட்டவுடன் அவள் கலைவாழ்வைத் துறக்கும் கோலம் நெஞ்சைத் தொடுவதாகும். வாழ்வின் உயிர்நாடி ஒடுங்கியவுடன் மிக்க ஈடுபாடு கொண்டிருந்த கலை வாழ்வும் ஒடுங்குகின்றது.

வேனிற் காலத்தில் மாரன் மலர்வாளியொடு தமிழகமெங்கும் திரிதர, மாதவி கோவலன் ஊடலைத் தீர்க்கத், தான் எப்போதும் கைக் கொள்ளும் முறையையே பின்பற்றுகின்றாள். ஒரு வேறுபாடு. கலையுணர் வுடன் தன்னை வாசநறுமலரொடு புனைந்து நிற்பவள், இன்று அவ் வுணர்வு காதல் மணத்துடன் மடலிற் கமழுமாறு கலைநயமிக்க காவிய மடலை வடித்தெழுதி அனுப்புகின்றாள். இலக்கியங் கற்பார்க்குத் தலை சிறந்த காதற் காவியமாகத் தோன்றுகின்றது, அவள் வரையும மடல். கோவலனுக்குத் திருமுகம் விடுக்கும்படி மாதவிக்கு ஆணையிட்ட மாரனது பெருமையை,

'விரைமலர் வாளியின் வியனிலம் ஆண்ட
ஒருதனிச் செங்கோல் ஒருமகன் ஆணையின்'

என்றார் ஆசிரியர். அரசனது ஆணையால் எழுதப்பட்ட கடிதம் ஆதலின் அதனைத் திருமுகம் என்றார். மாதவி வரைந்த மடலின் சிறப்பை விளக்க நினைத்த அடிகள்,

'ஒருமுக மன்றி உலகுதொழு திறைஞ்சும்
திருமுகம் .....

என்றார். மாரன், மாநிலம் ஆண்ட ஒருதனிச் செங்கோல் திருமகன் ஆகையால் அவனாணையால் வரையப்பட்ட திருமுதம் உலகுதொழு திறைஞ்சுதற்குரியது என்று அடிகள் கருதினார் போலும். மாதவி கடித ஏடாகக் கொண்டது, முதிர்ந்த அழகிய தாழையினது வெள்ளிய இதழாகும். பூம்புகார் கடற்கரைக் கண்ணது ஆதலால் நெய்தல் நிலத்

துக் கருப்பொருளாகிய தாழைமடலை எழுதும் தாளாகக் கொண்டாள். அம்மடல் நல்ல நிறமும், பளபளப்பும், நறுமணமும், காய்ந்துலர்ந்தாலும் கெடாத வன்மையும் உடையது. எழுதுகோல், 'பித்திகை கொழுமுகை ஆணி' என்றதனால் நறுமணமுள்ள பூவரும்பின் முனையாகும். மை, செம்பஞ்சின் குழம்பாகும். ஆகவே, வெண்ணிறமான தாழையிதழில், செந்நிறமான குழம்பால் பூவரும்பின் முனை கொண்டு எழுதப் பெற்றதால், இக்கருவிகள் காதற் குறிப்பிற்கேற்றபடி இன்பம் விளைக்கும்பொருள்களாக அமைந்தனஎன்பது புலனாகும். காதல் மணத்தோடு கலைமணங் கமழும் மடலில் அமைந்த எழுத்துக்கள் அவளுணர்வின் வண்ணங் கலந்து பொலிந்ததெனலாம்.

"மன்னுயி ரெல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்வியன் அல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்றிஃ தறிந்தீமின்"

என மாதவி எழுதியதாக அமைத்துக் காட்டுகின்றார் அடிகள். மாதவி பிறப்பாற் பரத்தை குலத்தளாயினும் மிக்க நாகரிகமும் ஒருவழிப்பட்ட காதலும், அறிவும் உடையவளாதலின் இங்ஙனம் தன் காதற்குறிப்பினை உணர்த்திக் கோவலனின் சிற்றத்தைத் தணிக்க முற்படுகின்றாள். இவளெழுதிய கடிதத்தை வசந்தமாலை கைக்கொடுத்துக் கோவலனைக் கொணரும்படி கூறி அனுப்புகின்றாள்.

'விளையா மழலையின் விரித்துரை எழுதிப்
பசந்த மேனியள் படருறு மாலையின்
வசந்த மாலையை வருகெனக் கூஉய்த்
தூமலர் மாலையில் துனிபொரு ளெல்லாங்
கோவலற் களித்துக் கொணர்க ஈங்கென'

அனுப்புகின்றாள். பிரிவுத் துயரால் மாதவியின் மாநிறமேனி பசந்து விட்டதை ஆசிரியர் உணர்த்தி விடுகின்றார்.

மடலைக் கொண்டு வந்த வசந்தமாலையிடம் கோவலன், மாதவி முன்னர் ஊடியும், கூடியும் நிகழ்த்திய செயல்களை யெல்லாம், நாடக வுறுப்புக்களாகிய எண்வகை வரிக்கூத்தாகக் கொண்டு வெறுத்துக் கூறுகின்றான். பின்னர் அவளை நோக்கி,

'ஆடல் மகளே யாதலின் ஆயிழை
பாடுபெற் றனவப் பைந்தொடி தனக்கு'

என்று மணித்தோட்டுத் திருமுகத்தை மறுக்கவே, தோழி வருந்தி மாதவிக்கு உற்றதை உரைக்கின்றாள். கோவலனது மாறுபட்ட உள்ளத்தை உணராத மாதவி அவன் திரும்பி விடுவான் எனும் நம்பிக்கையையே மீண்டும் கொள்கின்றாள். தன்னிடம் குற்றமே இல்லாத, தன்னுயிரினும் மேலாகக் கொண்டவளை, அவன் வெறுத்து ஒதுக்குவான் என்னும் எண்ணம் அந்தப் பெண்ணின் உள்ளத்தே தோன்றவில்லை. பிரிவுத்துயர் அவளை வாட்டுகின்றது.

"மாலை வாரா ராயினும் மாணிழை
காலைகாண் குவமெனக் கையறு நெஞ்சமொடு
பூமலர் அமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென்"

என்று கண்பொருந்தாது வருந்திய மாதவியின் கையற்றநிலையைக் கூறி முடிக்கின்றார் ஆசிரியர். ஊடிச் சென்றவன் காலை வருவான் என அவள் எண்ணுவது கோவலன் கொண்ட பழக்கத்தைக் காட்டுகின்றது.

மாதவியின் அவல வாழ்க்கைத் தொடர்ச்சியை இளங்கோவடிகள் ஒரு காட்டுத் தெய்வத்தின் வாய்ச்சொல்லாக அமைத்துக் காட்டுகின்றார். மதுரை செல்லும் வழியே, கோவலனை மயக்க நினைத்தவனசாரிணி, வசந்தமாலையின் வடிவு கொண்டு பொய்யாக நடித்த தென்றாலும், மாதவியின் துயரைக் கூறும் பகுதியில் உண்மையைக் கலந்து கூறுகின்றதெனலாம். தெய்வம் மாதவி கூறும் தனித் துயரை உணர்ந்தது போல் கூறுகின்றது.

"மாதவி மயங்கி வான்றுய ருற்று
மேலோ ராயினும் நூலோ ராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்மெனச்
செவ்வரி ஒழுகிய செழுங்கடை மழைக்கண்
வெண்முத் துதிர்த்து வெண்ணிலாத் திகழும்
தண்முத் தொருகாழ் தன்கையாற் பரிந்து
துனியுற் றென்னையும் துறந்தனள்"

என்று உரைக்கும் கூற்று எதுவரைக்கும் உண்மை என்பது ஆராய்தற்பாற்றாகும். கண்ணிமைப் பொருந்தாது, பசலைநோயுற்றுக் கையறு நெஞ்

சத்தொடு காணப்பட்ட மாதவி செழுங்கடை மழைக்கண் வெண்முத்து திர்க்கும் அவலநிலையைக் காணவியலுகின்றது அவள் கணிகையர் வாழ்க்கைத் தீராத் துயரளிப்பது எனவுணர்ந்து தானும், தன்மகளுடன் துறவு கொள்ளும் நிலை காப்பியத்தினிறுதியிற் குறிக்கப் பெறுகின்றது மாதவியின் இத்துயர் நிலையைக் கூறின் மனம் இளகிவிடுவான் என்று நினைத்து வந்த வனசாரிணியைக் கோவலன் நம்பவில்லை. ஏனெனில், தன் தோழியாகிய வசந்தமாலையை மாதவி விரட்டிவிடும் அளவிற்கு அவள் கடின நெஞ்சம் படைத்தவளல்லள் என்னும் கலையுணர்வு நிறைந்த செல்விய உளத்தை அவன் அறிந்தவனாதலின் 'பாய்கலைப் பாவை மந்திர மோதி' உண்மை நிலையைக் காண்கின்றானெனலாம்.

மாதவி துயரக் கண்ணீரால் உளங்கழுவப் பெற்றுப் புடமிட்ட பொன்போல் மாறிய பக்குவ நெஞ்சமொடு கோசிகனிடம் ஓலையொன்று எழுதியனுப்புகின்றாள். கோவலன் துயரத்தால் உருமாறியிருந்ததால் அவனை அறிந்து கொள்வதற்காகக் கோசிகன் அறிவுமுறையைக் கையாள்கின்றான். அது கோவலனின் உணர்வை ஈர்த்துக் கொண்டு வருகின்றது.

“கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
வருந்திறல் வேனிற் கலர்களைந் துடனே
வருந்தினை போலுநீ மாதவி”

என்று அருகே வாடிநின்ற மாதவிக்கொடியைக்கண்டு கூறியதும் கோவலன் கோசிகனை அணுகிச் செய்தி கேட்கின்றான். மாதவி எனும் பெயர் கேட்ட அளவிலேயே கருத்து கவரப் படுகின்றான்; கலை நெஞ்சம் அன்பை என்றும் மறப்பதில்லை. கோசிகன் புகார் நகரத்தே இருபெருங் குரவரும் அவர்கள் பிரிந்ததால் அடைந்த துன்பத்தை உணர்த்திய பின்னர் மாதவியின் அவல வாழ்வை உணர்த்துகின்றான். வீழ்துயருற்றாளின் விழுமங் கேட்டுத் தான் துன்பமடைந்து அவளைக் காணச் சென்ற போது, மாதவி துயரைக் குறைப்பதற்காக மலர்க்கையில் எழுதித் தன் கண்மணியனையாற்குக் காட்டுக என விடுத்த ஓலையைக் கோசிகமுனிவன் கோவலனுக்குத் தருகின்றான். என்றுமே நறுமணத்தில் ஈடுபாடு கொண்டவனின் திறமறிந்து மண்பொறியால் முத்திரையிட்ட ஓலையைத் தன்மயிரிழையொன்றால் இணைத்துக்கட்டி அனுப்புகின்றாள். அதன் நெய்வாசம் அவளோடு உறைந்த போது உணர்ந்தவனாதலின் அக்கடிதத்தை இழக்க நெஞ்சுவிழையாதவனாய்ப் படிக்கலானான். மேலும் மாதவியின் துயர்நிலையை நேரிற் கண்டுரைத்த கோசிகனின் வாக்கால் மனமிளகிப் போனான் என்றே கொள்ளலாம்.

'உடனுறை காலத் துரைத்தநெய் வாசம்
குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்திக்
கட்டிய தாதலிற் கைவிட லீயான்
ஏட்டகம் விரித்தாங் கெய்திய துணர்வோன்'

என்று அமைத்துக் காட்டுகின்றார் ஆசிரியர்,

கோவலன் கண்ணகியை அடைந்த செய்தியுணர்ந்த பின்னர் தன்றுயரை மாற்றி, உணர்வுகள் ஆன்றவிந்து அடங்கிய உள்ளத்துடன் எழுதிய கடிதம், கோசிக முனிவன் கையிற் கொடுத்தனுப்பிய நேர்மை யுணர்வு புலப்படும்படி அமைந்திருந்த முறைகொண்டு அறியவியலு கின்றது.

'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனங்கொளல் வேண்டும்
குரவர்பணி அன்றியுங் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சி புரையோய் போற்றி'

என்று அமைந்திருந்தது கடிதம். முதற் கடிதம் போன்று, கோவலனைத் தன்பால் கொணர்தற்குக் காதலுணர்வுகளை யெல்லாங் கொட்டி எழுதப் பெற்ற கடிதம் அன்று இது. தான் செய்த குற்றம் அறியாது வினவும் நிலையுந் தெரிகின்றது. தன்மீது அவள் கொண்ட ஐயம் தீர்ந்து போகும்படி, தான் செய்ததாக அவள் உணர்ந்த குற்றத்திற்குத் தாழ் மையுடன் மன்னிப்புக் கோரும் உயர்ந்த கடிதமாகவும் அமைகின்றது. அவளுடைய வறுமைநிலை உணராது தான் ஊடியது தவறு என அறிந்தாள் எனலாம். கண்ணகியின் வாழ்க்கைப் பாதையினின்றும் தான் என்றும் விலகி விட்ட நிலை உணர்த்தும் வகையில், காதலிக்குரிய உரிமை எதுவும் புலப்படுத்தாது, 'அடிகள்' என்றும், 'பொய்தீர் காட்சி புரையோய்' என்றும் அமைப்பது, ஒரு சான்றோரை அணுகியும், அணு காமலும் தவற்றை மன்னிக்கும்படி வேண்டும் அடியவர் எழுதுவது போல் அமைவதைக் காணலாம். முத்திரையிட்டபின் பயன்படுத்திய மயிரிழையால் ஏற்பட்ட கூந்தலின் மணம் தவிர, வேறு மணம் எதை யுங் கூட்டாத ஓலை அவளது துறவு மனப்பான்மையின் எதிரொளியாக அமைகின்றது. 'குலப் பிறப்பாட்டி' என்று கண்ணகியைக் குறிப்பது, அவளுடைய பண்பட்ட உள்ள மேன்மையை உணர்த்துவதாகும். தன் பரத்தைகுலப பிறப்பை நினைந்து, கண்ணகியே அவன் உரிமை மனையாள் என்று கூறி தான் விலகி நின்ற நிலையை இறுதிவரை காப்

பாற்றுகின்றாள். துணைவியாகிய கண்ணகியோடு இரவுக் காலத்தில் பிரிந்து சென்றதற்காகவே வருந்துகின்றாள். தான் பெற்றிருந்த காதல் வாழ்வெல்லாம் தனக்கு விட்டுக் கொடுத்த கண்ணகிக்கே உரியன என்று உளமாரக் கருதி விட்ட மாறுதலால் தன் மகளான மணிமேகலையையும், கண்ணகியின் மகள் என்று கூறும் மனப்பான்மை பெறுகின்றாள். "மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை" என்கின்றாள். அவள் முதலிற் காதற்பற்றை நீக்கித் தனித்து நின்றமையால் கோவலன் இறந்த செய்தி கேட்டவுடன் மனைவி எனுந் துடிப்பில் உயிர் விடாது பரத்தையர் குலம் ஒழிகவெனச் சமூகப் புரட்சியை உணர்த்தும் வகையில் துறவுக் கோலம் கொள்கின்றாள் என அறிய வியலுகின்றது. மாதவியின் கடிதங் கண்டவன் தன்னுடைய ஐயமெனும் உள்ளமாசும் நீங்கி, அவளுடைய தவறு எதுவுமில்லை எனவுணர்ந்து 'என்தீதென்றே' ஒப்புக்கொள்ளும் மனநிலை காணவியலுகின்றது. அவள் கடிதம் சான்றோர் ஒருவரிடம் வேண்டி இறைஞ்சும் கடிதமாக அமைதலின், அதனையே மாற்றாது தான் அனுப்பியதாகத் தந்தைக்குக் காட்டுமாறு கோவலன், கோசிகாமணியிடம் கொடுத்தனுப்புகின்றான். கோவலனின் அன்பு இல்லத்தில் மாதவியைச் சுற்றமாக ஏற்கும் உள்ளப் போக்கைக் காண இயலுகின்றது.

துறவற வாழ்க்கை

மணிமேகலையின் பெயர்சூட்டு விழாவின்போது, கோவலன் பிறர் வியக்கும்படிச் சிறப்பாகக் கொண்டாடிய காட்சியை உணர்த்தும் மாடல மறையோனே, இறுதியில் அவளது துறவு வாழ்வை, மாதவியின் இறுதி வாழ்வின் புரட்சியை மன்னன் செங்குட்டுவனுக்கும், மற்றையோர்க்கும் உணர்த்துகின்றான். கோவலன் கண்ட தீக்கனவும் இங்கு நினைவுகூரத் தோன்றுகின்றது. அடைக்கலக் காதையில் மாடலனிடம் கோவலன்,

"மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து
காமக் கடவுள் கையற் றேங்க
அணிதிகழ் போதி அறவோன் றன்முன்
மணிமே கலையை மாதவி யளிப்பத்"

தான் கனவு கண்டதாகக் கூறுகின்றான். கலை ஈடுபாடுடைய நெஞ்சம் துறவை நாடுவதெனின் எத்தகு அவலச் சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்றுணர்ந்து 'கடிதிங்குறும் எனக் கோவலன் அஞ்சும் வருத்தத்தை உணர இயலுகின்றது. அவன் தன்மகள் மீது கொண்ட பாசம் ஈண்டு வெளியாகின்றது.

மாதவியை நேரடியாகக் கற்போர்க்கு ஆசிரியர் காட்டாவிட்டாலும், அவள் துறவு முடிவை எய்துதற்குமுன் அடைந்திருக்கும் உளப் போராட்டத்தின் அவலத்தை மற்றையோர் வாயிலாகவே பெற வைக்கின்றார். கோவலன், கண்ணகி எனும் இருவரின் அவல முடிவைக் கேட்டு, அவர்கள் தாயர் இருவரும் இறந்துபடத் தந்தையர் துறவு கொண்ட துன்பியலை அறிந்த மாதவியின் நிலையை ஆசிரியர் மாடலன் கூற்றாக அமைத்துக் காட்டுகின்றார்.

''மற்றது கேட்டு மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வான்றுயர் உறுக்குங்
கணிகையர் கோலங் காணா தொழிகெனக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்''

என மாடலன் உண்மை கூறுவதாக அமைக்கின்றார் ஆசிரியர். கண்ணகியின் அவலமும், உலகடைந்த இன்னலும் ஏற்படக் காரணமாயமைந்தது கணிகையர் குலமென சமூகத்தில ஒதுங்கியிருக்கும் தனியான அமைப்பு என்பதை உணர்ந்தவளின் சிற்றமும், வெறுப்பும் தன் குலத்தின் மேல் ஏற்படுகின்றது. ஆகவே வான்றுயர் உறுக்குங் கணிகையரின் கலைக்கோலம் மணிமேகலையுங் காண வேண்டாமென்று அவளையும் புத்தமதத் துறவியாக்கிவிடுகின்றாள். வாழ்த்துக் காதையில் அடித்தோழி கண்ணகியிடம்,

''காதலன் றன்வீவுங் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறும் ஏச்சுரையுங் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன் றுறவுங் கேட்டாயோ தோழீ
மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ''

என்று அரற்றுவதிலிருந்து, கண்ணகிக்கு மாதவிபால் வெறுப்பில்லை என்றறிவதோடு அவர்களுடைய துறவு ஊரினருக்குங், கலைச் செல்வர்க்குந் துயர்தந்த உண்மை புலனாகின்றது. அழகிளங் கன்னியான மணிமேகலையின் கூந்தலைக் களைந்த வரலாற்றைத் தேவந்தி செங்குட்டுவனுக்கு உணர்த்தும்போது உலகமடைந்த இன்னலை உணர்த்துகின்றாள்.

''ஆங்கது கேட்ட அரசனும் நகரமும்
ஓங்கிய நன்மணி யுறுகடல் வீழ்த்தோர்
தம்மிற் றுன்பம் தாம்நனி யெய்த''

என்று அமைத்துக் காட்டுகின்றார் ஆசிரியர். இதனையே 'மணிமேகலை' ஆசிரியரும் ஊரலர் காதையில் உணர்த்துகின்றார். மன்னன் துயரையும், நகரத்தார் துனபத்தையும் பொருட்படுத்தாது, சமூகத்தின் தவற்றை உணர்த்த எதிர்த்துப் போராடியவள் மாதவி. விஞ்சையரும், மக்களும் வியக்கும் வண்ணம் அவள் கொண்டிருந்த ஆடற்கலையும், புணவிலும், கலையின்பத்திலும் அவள் அக்கலை வாழ்வைத் துறப்பதற்குக் காரணமாக விருந்த அகவாழ்வின் போராட்டதை உணர வியலுகின்றது. கலையின் இருப்பிடம் பரத்தையர் சேரி என்று சமூகம்

ஒதுக்கி வைத்ததை எதிர்த்துப் போராடிய உண்மைநிலை, கொள்கைத் திண்மை என்பவற்றை மாதவி வாயிலாய் உணர்ந்துகொள்ள வியலுகின்றது.

மாதவியின் வரலாறு முழுவதுமுணர்ந்திருந்த மாடலன் நீர்ப்படை காதையில் வடபுலத்து மன்னர்களுக்கும் புரியாத நகைமொழியென மாதவியின் கானல்வரிப் பாடலைப் பற்றிக் குறிக்கின்றான்.

"வாழ்க வெங்கோ மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது"

என்கின்றான். மாதவி, கானல்வரி பாடியிரா விடின், கோவலன் அவளை

' ஆங்கவள் உரைகேட்டு அரும்பெறல் மாமணி
ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று
மையல் நெஞ்சமொடு ..(மணிமேகலை ஊரலர் காதை) (72-74)

பிரிந்திருக்க இயலாது. அவன் பிரிந்ததாற்றான் அவன் கண்ணகியுடன் மதுரை போந்து உயிரிழக்கச், சிலம்புச் செலவியின் அரியசெயலைச் சிறப்பிக்கும் வண்ணம் சேரன் செங்குட்டுவன் இமயத்திற் கல்லெடுத்துத் தமிழரை இகழ்ந்து பேசிய கனகவிசயர்தம் முடியேற்றிக் கொணர முடிந்தது எனும் பொருள் விளங்கும்படி மாடலன் கூறுகின்றான். மறையோனே வியக்கும் வண்ணம் மாதவி பண்பிற் சிறந்திருந்தாளென்பதையும், கண்ணகி நிலைபெற்ற நெஞ்சங்களி லெல்லாம் மாதவிக்குத் தனியிடமுண்டு என்பதையும் இளங்கோவடிகள் மாடலன் கூற்றால் உண்மைநிலை உணர்த்துகின்றார். இவ்வாறு அடிகளின் படைப்புக்கள் ஒவ்வொன்றும் இயற்கைப் படைப்பையும் விஞ்சும் ஆற்றல் கொண்டுள்ளது.

'கோவலனென்பானோர் வாணிகன் அவ்வூர்
நாடக மேத்தும் நாடகக் கணிகையொடு
ஆடிய கொள்கையின் அரும்பொருட் கேடுற'

என்று பதிகத்திற் குறிக்கப்பெறும் மாதவியின் வரலாற்றை அறிந்திருந்த இளங்கோவடிகள், பெண்மைப் பொலிவுடன் கற்புநெறிக் கொண்ட ஒருபெண் கலைச் செல்வமிக்க பரத்தை குலத்திற் பிறந்தால் அடையக் கூடிய உள்ளக் குமுறல்களையும், வாழ்க்கைப் போராட்டங்களையும் நன்குணர்ந்து, நடுவுநிலை பிறழாது, குலப்பிறப்பாட்டி கண்ணகியை உயர்த்துவதற்காக மாதவியின் பாத்திரப் படைப்பிற் குறை வைக்காது, அப்பரத்தை குலம் ஒழிய அதே குலப் பெண்ணின் மூலம் ஏற்பட்ட புரட்சியைக் கற்போர் மனங்கொள்ளுமாறு சிறந்த முறையில் அமைத்துக் காட்டிக் காப்பிய நோக்கம் வெற்றியடையச் செய்கின்றார்.

மொழியியல் கலைச்சொல் விளக்கம் - 1

சு. இராசாராம், எம். ஏ.,
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்-6.

'மொழியியல் கலைச்சொல் விளக்கம்' என்ற இத் தொடர் கட்டுரைக்கான முயற்சி இன்றைய தமிழிலக்கிய மாணவர்களிடையே காணப்படும் மொழியியலைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டுமென்ற பரவலான வேட்கையின் விளைவே ஆகும். மொழியியலைப்பற்றிய நூல்கள் தமிழில் அதிகம் இல்லையாயினும் மொழியியல் என்றால் என்ன என்ற கேள்விக்குப் பதில் கூறும் நூல்கள் சில வெளியாகி உள்ளன. மொழியியல் கலைச்சொற்களுக்கு மொழியாக்கம் தருவதோடன்றி அதற்கான விரிவான விளக்கம் கொடுப்பதுமே இத் தொடர் கட்டுரையின் நோக்கம், மொழியியலில் பயின்று வருகின்ற ஒவ்வொரு கலைச் சொல்லிற்கும் விரிவான விளக்கம் தருவதென்பது அச்சொல்லோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கோட்பாடுகளுக்கும் தருகின்ற விளக்கம் அன்று என்பதை இங்கே குறிப்பிடவேண்டும். எல்லா மொழியியல் கலைச்சொற்களும் இப்பகுதியின் விரிவான விளக்கத்தோடு இடம் பெறுவதால் சிலகோட்பாடுகளையும் கொள்கைகளையும் கொண்டுகூட்டிக் கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக ஒலியனைப் (Phoneme) பற்றிய கலைச் சொல்விளக்கம் ஒலியலைப்பற்றி மாத்திரமே இருக்குமேயன்றி அதனை ஒரு மொழியில் இனங்கண்டுகொள்ளும் ஒலி ஆய்வு முறையை (Phonemic Analysis) விளக்காது நிற்கும் என்பதாம்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் இதுவே முதல் முறையாகும். மொழியியலைப்பற்றிய நூல்களின் எண்ணிக்கை உயர உயர இம் மொழியியல் கலைச்சொல் விளக்கத்தின் தேவை இன்றியமையாததாகும் என்ற நம்பிக்கையின் அடிப்படையே இதன் உருவாக்கம் எனலாம். கல்லூரிகளில் மொழியியலைத் துணைப்பாடமாகத் தெரிவு செய்துள்ள மாணவர்க்கு இது பெரும்பயன் அளிக்கும்.

மொழியியல் (Linguistics)

மொழியியலில் பயின்றுவரும் கலைச்சொற்களுக்கு விளக்கம் கூறப் புகுவதற்கு முன்னர் மொழியியல் (Linguistics) என்ற கலைச்சொல்லிற்கு விரிவான விளக்கம் கூறவேண்டிய நிலைமை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. மொழியியல் என்றால் என்ன என்ற கேள்விக்குப் பதில் தருவது

மொழியியல் வரலாற்றில் புதிது அன்று. இது மொழியியலுக்கு மட்டுமே உரியதுமன்று. இன்றைய அறிவியல் உலகத்தில் புதிய கல்வித் துறைகள் நாளுக்கு ஒன்றாக முளையிட்டு வளர்கின்றன. இவ்வாறிருக்க, பதினெட்டாம் நூற்றாண்டில் அரும்பி இருபதாம் நூற்றாண்டில் மலர்ந்து மணம்பரப்பும் மொழியியலுக்கு விளக்கம் கூறுவது அவசியம் ஆகிவிடுகிறது, இதன்பொருள் மொழியியல் என்றால் என்ன என்ற கேள்விக்குப் புதிதான பொருள் சொல்ல முற்படுவது ஆகாது. மேலை நாடுகளில் இன்றைய மொழியியலின் தொடக்க காலத்தில் எல்லோருக்கும் தெரிந்த மொழியியலாக ஒப்பிலக்கணமே (Philology) இருந்தது. மொழியியலின் கொள்கைகளை ஒப்பிலக்கண ஆராய்ச்சியாளரால் (Philologists) எளிதாக வரவேற்க முடியவில்லை. இதற்கு முக்கிய காரணம், முதலில் மொழியியலை விளக்க மொழியியலோடு (Descriptive Linguistics) மாத்திரமே இனங்கண்டு கொண்டதாகும். மொழியியல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இனத்தவர் பேசும்பேச்சு மொழியை மட்டுமே விளக்கிச் செல்கிறது என்றும், மொழிவரலாற்றில் உண்டான இலக்கண மாறுதல்களுக்கு அது எவ்வித விளக்கமும் தரவில்லை என்றும், வரலாற்று மொழியியல் (Historical Linguistics) ஒப்பிலக்கணத்தின் கோட்பாடுகளிலிருந்தும் வேறுபடுகிறது என்றும் அவர் எண்ணினர். இதன் விளைவாக, இருசாராரிடையே கருத்துப் பூசல்களும் குழப்பங்களும் தோன்றின. விளக்கமொழியியல் (Descriptive Linguistics) ஒப்பிலக்கணத்தினின்று எவ்வாறு வேறுபடுகிறது என்று ஒப்புமை மொழி இயல் (Comparative Linguistics) வரலாற்று மொழியியலின் ஒருபகுதியாக மொழியியலில் கருதப்பட்டுகிறது என்றும் தெளிவுபடுத்தப்பட்ட பின்னரே கருத்துப் பூசல்களுக்கும் குழப்பங்களுக்கும் முடிவு ஏற்பட்டது. ஒப்பிலக்கணத்திற்கும் மொழியியலுக்கும் இடையே உண்டான இம்மயக்கம் மொழியியல் வல்லுநர்களிடையே வெகுகாலமாக இருந்துவந்தது என்பர். இதே மாதிரியான ஒரு மயக்கம் மொழியியலுக்கும் மொழியியல் கோட்பாடுகளோடு அமைந்த இலக்கண விளக்கத்திற்குமிடையே தமிழ்நாட்டு மொழிநூலறிஞர்டையே இருந்து வருகிறது. இதன் அடிப்படைக் காரணம் என்ன என்பதே இப் பகுதியின் நோக்கம்.

இன்றயை பத்திரிகை உலகில் தமிழ்மொழி இலக்கிய இலக்கணங்களை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகளைத் தாங்கி வரும் பத்திரிகைகள் மிகக்குறைவு எனலாம். இத்தகைய ஒருசில பத்திரிகைகளே இலக்கியத்திற்கும், இலக்கணத்திற்கும், இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒருசில மொழியியற் கட்டுரைகளுக்கும் இன்று எழுத்துருவம் கொடுக்கின்றன. இனிமேல் இவ்விதழ்களில் வெளியான மொழியியற் கட்டுரைகளைப் பற்றிப் பார்ப்போம்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இன்று மொழியியற் கட்டுரைகளை வெளியிடுகின்ற எந்தப்பத்திரிகையும் அவற்றைவெளியிட முன்வரவில்லை காரணம், முழுக்க முழுக்க அறிவியல் கோட்பாடுகளோடு அமைந்த அக்கட்டுரைகளுக்கு வாசகரிடையே எத்தகைய வரவேற்பு இருக்கும் என்ற அச்சத்தின் விளைவே ஆகும். மேலும் இம்முயற்சியில் ஈடுபட்ட மொழி நூலறிஞரும் ஒரு சிலரே என்றும் கூறலாம். பத்திரிகைகளில் வெளியான மொழியியற் கட்டுரைகளைப்பற்றி விவாதிப்பதற்கு முன்னர் மொழியியலைப்பற்றிய நூல்கள் சிலவற்றைத் தெரிந்து கொள்வது நல்லது.

திரு. மு. வரதராசன் 1947-ஆம் ஆண்டு எழுதிய மொழி நூலும், 1954-ஆம் ஆண்டு எழுதிய மொழி வரலாறும் மொழியியலைத் தமிழகத் திற்கு அறிமுகப்படுத்தின. அவ்விரு நூல்களும் வரலாற்று மொழியியல் கோட்பாடுகளை மட்டுமே விளக்கின. இதனைத் திரு. மு. வ. அவர்களே தம் நூலில் குறிப்பிடுகிறார். 'மொழி வரலாறு மொழியியல் என்னும் இரு துறையும் சென்ற நூற்றாண்டில் வளர்ந்தனவாகும். அன்றுமுதல் நேற்றுவரையில் இவ்விரு துறையிலும் கருத்துப் பூசல்களும் குழப்பங் களும் பல ஏற்பட்டுள்ளன. இன்றுபூசல்களும் குழப்பங்களும் மறைந்து கருத்து வேறுபாடுகள் மட்டுமே உள்ளன, அவற்றைக் குறித்துக் கவலை யுறாமல், உண்மை உணரும் வேட்கையுடன் அறிய முயல்வார்க்கு, இவ்விரு துறைகளும் பயனுள்ளனவாக விளங்குகின்றன. 1 மொழியிய லுக்கும் ஒப்பிலக்கணத்திற்கு மிடையே அவரும் மயங்குகிறார். மொழியி யல் என்பதை வரலாற்று மொழியியலோடு மட்டுமே இனங்கண்டு கொள்கிறார் திரு. மு. வ. அறிவியல் கோட்பாடுகளோடு அமைந்த மொழியியல் ஆராய்ச்சியை நாம் அவருடைய மொழி நூலிலோ மொழிவரலாற்றிலோ காணமுடியவில்லை. பின்னர், திரு ரா. சீனிவாச னின் 'மொழியியல்' வெளியானது, அவர் மொழியியல் கோட்பாடுகளைத் தமிழிலக்கண அமைப்போடு இனங்கண்டு கொண்டார். அவர் தம் முன்னுரையில், "இந்நூல்மொழியியல்கருத்துக்களின் அடிப்படையைக் கொண்டு நன்னூலோடும் தொல்காப்பியத்தோடும் தொடர்புபடுத்தி ஆராய்கிறது. மொழிவிளக்கவியல் அடிப்படையில் இந்நூல் எழுந்தா லும் ஒரு சில இடங்களில் மொழி ஒப்புமை இயலும் வரலாற்று இயலும் சேர்ந்துள்ளன. அதனால் இந்நூலிற்கு மொழியியல் என்ற

1. டாக்டர். மு. வரதராசன், மொழிவரலாறு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 1954.

தலைப்புக் கொடுக்கப்பட்டுளது "[2] என்று கூறுகிறார். மொழியியல் கருத்துக்களின் அடிப்படையைக் கொண்டு நன்னூலோடும் தொல்காப்பியத்தோடும் தொடர்புபடுத்தி ஆராய்ந்த இவ்வாராய்ச்சியின் விளைவாக மொழியியல் கருத்துக்களுக்கு ஒரு பரவலான விளம்பரம் உண்டானது, பல்கலைக் கழகங்களில் முதுகலை மாணவர்க்கு மொழியியல் இம்முறையிலேயே போதிக்கப்பட்டது. கால்டுவெல்லின் ஒப்பிலக்கணமும்[3] மாணவரிடையே மொழியியலைப் பற்றிய ஆர்வத்தை உண்டாக்கியது. நன்னூலையும் தொல்காப்பியத்தையும் இத்தகைய மொழியியல் கருத்துக்களின் அடிப்படையைக் கொண்டு ஆராயப்பட்ட முயற்சியே தமிழிலக்கண அறிஞருலகத்தை இரு கூறுபடுத்தியது. மொழியியலைப் பற்றிய பரவலான கருத்தும் அதனைப் பற்றிய தெளிவான அறிவும் இன்று இவ்விடைவெளியை நிரப்பிவிட்டது. உலகத் தமிழ் மாநாடுகளும், 1969-ஆம் ஆண்டு அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தின் மொழியியல்துறை நடாத்திய தொல்காப்பியக் கருத்தரங்கும் மொழியியலைப் பற்றிய தவறான எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளிவைத்தது. மொழியியல் கருத்துக்களின் அடிப்படையில் உருவான இத்தகைய இலக்கண ஆராய்ச்சியை இலக்கண விளக்கம் என்றே கொள்ளலாம். தொல்காப்பியத்திலிருந்தோ அல்லது நன்னூலிலிருந்தோ ஓர் இலக்கணக் கூறை உரைகாரர் கூறிய உரையோடு கொண்டு அதற்கு மொழியியல் கருத்துக்களின் அடிப்படையில் விளக்கம் கூறும் முயற்சியையே இங்கு இலக்கண விளக்கம் என்று பொருள் கொள்ளப்படுகிறது. எடுத்துக் காட்டாக, "நன்னூலார் தெரிநிலை வினையைப் பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் எனப்பிரித்துக் காட்டி 'முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும்' என்று கூறுகிறார். தமிழ்வினைகள் ஒட்டாக அமைகின்றன என்பதை நன்கு தெளிவுபடுத்துகிறார். அதனால் தமிழ் வினையமைப்பை ஒட்டு நிலையமைப்பு (agglutinative structure) என்பர்". இதனுடைய மேற்கோளாக "பொருளசை (morpheme) தனித்து நின்று பொருள் உணர்த்தும் சொல்லமைப்பைப் தனிநிலை (isolative) என்பர். இரண்டோ பலவோ ஒட்டி அமைந்து எளிதில் பிரித்து அறியக்கூடிய அமைப்பை ஒட்டுநிலை (agglsutinative) என்பர்; இவையே பிணைந்து பிரிக்கமுடியாமல் இயைந்தால் உட்பிணைப்பு நிலை (inflexional) என்பர்" என்று காட்டுகிறார். நன்னூலா

---

2. ரா. சீனிவாசன், மொழியியல், அணியகம், 22, செல்லம்மாள் தெரு செனாய் நகர், சென்னை-30.
3. Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, University of Madras, 1961.

ரின் தெரிநிலைவினைக்குறிப்புக்குத் திரு. ரா. சீனிவாசனின் மொழியியல் அடிப்படையைக் கொண்டு அமைந்தவிளக்கம் இது. மொழியியல், ரா. சீனிவாசன், பக்கம் 179).

மற்றொரு இலக்கண ஆய்வுமுறை ஆங்கில இலக்கணத்தோடு ஒப்பீடு செய்து விளக்குதல் ஆகும். எடுத்துக் காட்டாக, ஆங்கிலத்தில் செய்வினை (Active Voice) செயப்பாட்டுவினை (Passive Voice) என இருவகை அமைப்புகள் உள்ளன. செயப்படு பொருளுக்குச் சிறப்புத் தரும் நோக்கத்தாலும், கருத்தாதெரியாத நிலையிலும், கருத்தாவை அறிவிக்கவேண்டாத நிலையிலும் செயப்பாட்டு வினையமைப்புகளை மொழியில் இடம் பெறுகின்றன.

'நான் இந்த வீட்டைக் கட்டினேன்—
'இந்த வீட்டை நான் கட்டினேன்' என்று

சொல்லும்பொழுது செயப்படு பொருளுக்குச் சிறப்பு உண்டாகிறது. தமிழில் ஒருவகை வினைமாற்றமும் செய்யாமல் செயப்படுபொருளை முதலில் வைக்கமுடிகிறது.

''இந்த வீடு நான் கட்டியது'' என்பதில் செயப்படுபொருளை முன் வைப்பது மட்டுமன்றி அதனை எழுவாயாகவும் அமைக்க முடிகிறது. இதனையே தொல்காப்பியனார்,

''செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே''

என்பர் ஆங்கிலத்தில் செயப்படுபொருளை முதலில் வைத்து அதற்குச் சிறப்புக் கொடுக்க 'இரு' என்ற பொருளை உடைய துணைவினைகளை முன்னர் அமைக்க வேண்டியுள்ளது.

This house has been built by me.
This house was built by me.
This house is being built by me.
This house is built by me.

இவற்றுள் செயப்பாட்டு வினையமைக்க 'be' being என்ற பொருளை உடைய துணைவினைகள் வினைக்குமுன்னர் வருகின்றன. ஆங்கில வாக்கியங்கள் செயப்பாட்டுப்பொருளில் அமைதல் மிகுதி'' என்ற இப்பகுதியை எடுத்துக்கொள்வோம். (மொழியியல் ரா. சீனிவாசன். பக்கம் 223)

முன்னர்க் காட்டிய எடுத்துக்காட்டை இலக்கண விளக்கத்திற்காக ஒப்புக்கொண்டு மேலே காட்டியதை இரண்டாவது ஆய்வுமுறையின்ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்வோம். இவ்வொப்பீட்டு ஆய்வு முறையின் மூலம் வேறுபட்ட இரு மொழிகளின் இலக்கண அமைப்பைக் காட்டி விட முடியுமே தவிர மற்றொரு இலக்கணத்திற்கு விளக்கமாக இல் லொன்றைக் காட்டிவிடமுடியாது. மேலும் மொழியியலை ஆங்கில இலக் கணத்தோடு இனங்கண்டு கொண்டதுமே இவ்வாராய்ச்சிக்கு அடிப் படைக் காரணம் என்றும் கூறலாம்.

இவ்விரு ஆய்வுமுறையின் அடிப்படையில் பல இலக்கண விளக் கக் கட்டுரைகள் மொழியியல் என்ற தலைப்பின் கீழ் பத்திரிகைகளில் வெளியாயின - வெளியாகின்றன. இக்கட்டுரை ஆசிரியர்களுள் டாக்டர் செ. வெ. சண்முகம், டாக்டர் இசரேயல்[4] டாக்டர் இராம. சுந்தரம்,[5] டாக்டர். பொன். கோதண்டராமன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இவர்களை மொழியாராய்ச்சியாளர் 1. எனக்குறிப்பிடுவோம். தொல் காப்பியத்திற்கும் நன்னூலிற்கும் மொழியியல் கொள்கைகளின் அடிப் படையில் விளக்கம் கொடுப்பதே மொழியாராய்ச்சியாளர் 1. பிரிவைச் சேர்ந்த இவர்களுடைய கட்டுரைகள். மாறாக, மொழியியல் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்குகிற கட்டுரைகள் மிகச்சிலவே. டாக்டர் திருமலை,[6] திரு. அரங்கன்,[7] திரு. சு. இராசா ராம்[8] ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இப்பிரிவை மொழியாராய்ச்சி யாளர் 2 என்று குறிப்பிடுவோம். திரு. அரங்கனின் 'மாற்றிலக்க ணம்—ஓர் அறிமுகம் (An Introduotion to Transformational Grammar) என்ற கட்டுரையும், திரு. சு, இராசாராமின் 'ஒலியின் தனி வண் ணம்' (Distinctive Feature Analysis) 'மொழி ஆய்வுக்கூடம்'

---

4. டாக்டர். இசரேயல், குறிப்புவினை, செந்தமிழ், செப்டம்பர்-1970.
5. டாக்டர். இராம. சுந்தரம், எதிர்மறைவினை எச்சங்கள், செந்தமிழ் செப்டம்பர்-1970.
6. டாக்டர் திருமலை - கருணாகரன், 'மொழியியல்', பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1, 1970.
7. இ. அரங்கன், மாற்றிலக்கணம்—ஓர் அறிமுகம், செந்தமிழ், ஜூன் -1970.
8. சு. இராசாராம், ஒலியன் தனி வண்ணம், செந்தமிழ், மார்ச்-1969.

———————, மொழி ஆய்வுக்கூடம், செந்தமிழ், செப்டம்பர்-1970.

(Language Laboratory) ஆகிய கட்டுரைகளும் மொழியியல் கருத்துக்களை மட்டுமே விளக்குகின்றன எனலாம். மொழியாராய்ச்சியாளர் 1- பிரிவினர் தமிழ்மொழி இலக்கணத்தை விளக்க மொழியியல் கருத்தை எடுத்தாண்டுகொள்கின்றனர். மொழியாராய்ச்சியாளர் 2- பிரிவினர் மொழியியல் கருத்தை மட்டுமே தம் கட்டுரைகளில் விளக்குகின்றனர். இவ்வேறுபாட்டை இன்னும் விரித்துக் கூறினால் 'மொழியியல்' என்ற திரு. ரா. சீனிவாசனின் நூலிற்கும் 'மொழியியல்' என்ற திரு. திருமலை—கருணாகரனின் நூலிற்கும் உள்ள வேறுபாடு எனலாம். திரு. சண்முகம்பிள்ளையின் 'இக்காலத் தமிழ்' இவ்விரண்டும் இணைந்த ஒரு நூல். இப்பொழுது நம் முன்னே எழுகின்ற கேள்வி—எது மொழியியல்?

இக்கேள்விக்கு விடை கூறுவதற்கு முன்னர் மொழியியல் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த இலக்கண விளக்கத்திற்கும் மொழியியலுக்குமுள்ள வேறுபாடு என்ன என்பதைக் காண வேண்டும். 'இலக்கணம்' என்ற சொல்லே என்றோ யாராலோ மொழிக்காக எழுதப்பட்ட ஒன்று என்ற உணர்வை ஏற்படுத்திவிடுகிறது. இதற்கு முக்கியக் காரணங்களாகப் பலவற்றைக் கூறலாம். எடுத்துக்காட்டாக வகுப்பறைச் சூழ்நிலையை எடுத்துக்கொள்வோம். வகுப்பறையில் இலக்கண வகுப்பு ஆசிரியரால் நடத்தப்படும்போது ஆசிரியரும் மாணவரும் அவ்விலக்கணம் எழுதப்பட்ட காலத்திலிருக்கிற மனோநிலையைத் தம்மையும் அறியாமல் பெற்றுவிடுகின்றனர். இம்முயற்சிக்கு ஆசிரியரின் திறமையே முக்கிய காரணம் என்பதை ஒருபுறம் ஒப்புக்கொண்டாலும் இலக்கணத்தில் கையாளப்படுகின்ற மொழியின் முக்கிய பங்கை எவரும் மறுக்க முடியாது. இலக்கணக்கூறை விளக்குகின்ற அவர் எடுத்துக்காட்டுக்களையும் அக்குறிப்பிட்ட மொழியிலிருந்தே எடுத்தாண்டுகொள்கிறார். வகுப்பு முடிந்த பின்னரே ஆசிரியரும், மாணவரும அப்போதைய மொழிச் சூழ்நிலையை உணருகின்றனர். பின்னர் மாணவன் தான் கற்ற அத்தத்துவத்தைத் தன் மொழிச் சூழ்நிலையோடு இனங்கண்டுகொள்ள முயலுகிறான். அது முடியாத போது தான் கற்ற தத்துவத்தின் மீது வெறுப்புக்கொள்வது இயற்கைதானே. இரண்டாவது காரணமாக, இலக்கணத்தில் பயின்றுவரும் நூற்பாக்களுக்கு எளிய தமிழில் விளக்கம்கொடுத்துவிட்டுக் கடினமான எடுத்துக்காட்டுக்களைத் தருவதைக் கூறலாம். எடுத்துக்காட்டுக்களும் எளிய தமிழில் அமையுமானால் மாணவர்க்கு இலக்கணம் மீது ஆர்வம் உண்டாகலாம். மொழியியல் இப்பணியைச் செவ்வனே செய்கிறது. மொழியியற் கூறுகளுக்கு விளக்கமும் எடுத்துக் காட்டுக்களும் அப்பொழுது வழங்கு

கின்ற மொழியிலிருந்தே கொடுக்கப்படுகின்றன. மேலும், எதையுமே அறிவியல் கண்ணோட்டத்தோடு நோக்கும் இன்றைய உலகம் மொழியியலை இலக்கணத்தின் புதுமை வடிவம் என்றே கொள்கிறது பொதுவாக மொழியியலுக்கு இருக்கிற இன்றையக் கவர்ச்சி இலக்கணத்திற்கு இல்லை. எனவேதான் மொழியியல் கருத்துக்களின் அடிப்படையில் இலக்கணப்பகுதியை விளக்குவதை ஒருவிதமான எழுத்து நாகரிகமாகக் கொண்டனர் மொழியாராய்ச்சியாளர் 1 பிரிவைச் சார்ந்தவர்கள் இவர்கள் எழுதிய கட்டுரைகள் மொழியியற்கட்டுரைகளாகக்கருதப்பட்டன-படுகின்றன. இவைகளும் மொழியியற் கட்டுரைகள்தாம் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இவர்கள் மொழியியல் கொள்கைகளை விளக்கத்தமிழ் இலக்கணத்தைப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதைவிட இலக்கண நூற்பாக்களுக்கு மேலும் விளக்கம் தர மொழியியல் கொள்கைகளை எடுத்தாண்டுகொண்டனர் என்பதே பொருந்தும். மாறாக, மொழியியல் கொள்கைகளை விளக்கவே தமிழ் இலக்கணம் எடுத்தாளப்பட்டிருக்கிறது என்ற விவாதத்திற்கு அவர்கள் உடன்பட்டால் மொழியியல் அறிவியலை அடிப்படையாகக் கொண்ட மொழியமைப்பு ஆராய்ச்சியன்று என்பதை இங்கே தெளிவுபடுத்த வேண்டும். மேலும், இக்கட்டுரைகள் பழந்தமிழ் இலக்கணத்தையும் தற்காலமொழியியலையும் ஒப்பிட்டு நோக்குவனவாகவும், இலக்கணத்தில் விளக்கப்படாத சிலவற்றிற்கு மொழியியல் அடிப்படையில்விளக்கம் தருவனவாகவும் மட்டுமே அமைகின்றன. திரு. சண்முகம்பிள்ளையின் 'இக்காலத் தமிழின்' [9] முற்பகுதியைப் படிப்பவர்க்கு இவர்கூறும் மொழியியல் என்ன என்ற கேள்வி எழும். அவர்மொழியியல் கொள்கைகளைவிளக்கித் தமிழ்மொழியின் ஒலிகளை ஆராய்கிறார். இது தொல்காப்பியரின் ஒலியாராய்ச்சிக்கோ ஒலிபாகுபாட்டுக்கோ விளக்கம் தருவது ஆகாது. அவர் இன்றையத் தமிழின் ஒலியமைப்பை (phonological Structure) வலியுறுத்துகிறார்.

மொழியாராய்ச்சியாளர் 1, மொழியாராய்ச்சியாளர் 2 என்ற இவ்விரு பிரிவினரும் விளக்க முற்படுவது மொழியையே என்றுமேற் போக்கிற்காக ஒத்துக்கொள்ள முடியாவிட்டாலும் அடிப்படை ஒன்றுதான். முன்னவர் மொழியமைப்பை விளக்கும் இலக்கணத்தைத்தெளிவுபடுத்த மொழியியல் கருத்துக்களைக் கையாளுகிறார். பின்னவர் மொழியியலையே அடிப்படையாகக் கொண்டு மொழியமைப்பை விளக்க முற்படுகிறார். எனவே இவ்விருசாராரும்மொழியியலில் எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சி முறையே மொழியியலின் தொடக்கமும் அதனுடைய வளர்ச்சியும் என்றே கூறலாம்.

---

9. முத்துச் சண்முகன், இக்காலத்தமிழ், சியோன் பதிப்பகம், பங்கசம் காலனி, மதுரை-9. 1967.

மொழியியல் (Linguistics)

ஆஸ்டிரிக் மொழிக் குடும்பம்

சு. சக்திவேல், M. A., M. A.,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மொழி, கருத்தைப் புலப்படுத்துவதற்கும் சிந்தனை செய்வதற்கும் மறக்கப்படுவனவற்றை மறவாமல் காப்பதற்கும் கருவியாகப் பயன்படுகிறது மொழி மக்களின் மனதைக் காட்டும் கண்ணாடி என்பதால், மொழியியலை எடுத்துக் காட்டுடன் இயைந்த உளநூல் என்கின்றனர்[1]. இந்தியா பல்வேறு மொழிபேசும் இனமக்களைக் கொண்டதாகும். இந்தியாவை மொழிகளின் பொருட்காட்சிச்சாலையென்றும் கூறுவர்.

இந்தியாவிலுள்ள பெரும்பாலோர் வெளிநாட்டினின்று வந்தவர்களென்று வரலாற்றாசிரியர்களும் மானிவியலார்களும் சமூகவியலாரும் கல்வெட்டாய்வாளர்களும் கூறுகின்றனர். இந்தியாவிற்கு வந்த முதலினம் நீக்ரிட்டோ இனமாகும். ஆப்ரிக்காவினின்றும் வந்த நீக்ரிட்டோக்கள் இந்தியாவின் வடகிழக்கிலும் வசித்தனரெனக் கொள்ளலாம். நீண்ட தலையும் கறுத்த நிறமும் அகன்ற சப்பை மூக்குமுடைய பழைய ஆஸ்திரேலிய இனம் வடகிழக்கிலிருந்தும் வடமேற்கிலிருந்தும் இந்தியாவிற்கு வந்ததாகக் கூறுவர்.[2] அவர்கள் பேசுகின்ற மொழியே ஆஸ்டிரிக் மொழியாகும். இந்தியாவில் பேசப்படும் மொழிகளை நான்குவகையாகப் பிரிப்பர்: 1. இந்தோ-ஆரிய மொழிக்குடும்பம் 2. திபெத்தோ-பர்மிய மொழிக்குடும்பம் 3. ஆஸ்டிரிக் மொழிக்குடும்பம் 4. திராவிட மொழிக் குடும்பம்.

இந்நான்கு மொழிக்குடும்பங்களில் ஆஸ்டிரிக் மொழி பேசுபவர்களைப் பற்றியும் அம்மொழிகளது முக்கிய பிரிவுகளைப் பற்றியும் இவண் காண்போம். ஆஸ்டிரிக் மொழிபேசும் இனத்தார் சிலோன், பர்மா, இந்தோனேசியா, மலேசியா, இந்தியா ஆகியவிடங்களில் வாழ்கின்றனர். ஆஸ்திரேலியஇனத்தவர் நீக்ரிட்டோக்களுடனும்மங்கோலியர்களுடனும் கலந்து வாழத்தலைப்பட்டனர். ஆஸ்டிரிக் மொழிகள் இந்தியாவின் மத்திய, வடகிழக்குப்பகுதிகளில்வாழும் ஆதிமக்களிடையே வழங்குகின்றன. அஸ்ஸாமிலுள்ள பழைய மங்கோலிய இனத்தவரன்றி மூண்டா, ஹோ போன்ற மத்திய இந்திய வகையினர்க்கும் சிம்மாங்க், சகாய் மக்கட்கும் தாய்மொழிகளாக உள்ளன. மத்திய இந்தியப்பகுதிகளில்வாழும் பழங்குடிகளில் பெரும்பாலோர் ஆஸ்டிரிக்மொழிக்குடும்பத்

---

1. Pillsbury and Meader, The Psychology of language PP. 17-290
2. Sakthivel S. Race and Language, Kalai kathir March 67 Coimbatore

தைச் சார்ந்தவர்கள். இவர்களில் பீல் என்ற பிரிவினரும் கோல் என்ற பிரிவினரும் ஆரியமொழி பேசுகின்றனர். 1854-ல் அறிஞர் மாக்ஸ்முல்லர் அவர்கள் இம்மொழிகளை 'மூண்டா மொழிகள்' எனப் பெயரிட்டு அழைத்தார்கள். பேராசிரியர் ஸ்மித் அவர்கள் இம்மொழிகள் கிழக்காசிய மொழிகளுடன் தொடர்புடையதாகையால் 'ஆஸ்டிரிக்' எனப் பெயரிட்டார். முண்டாமொழிகளை கொலேரியன் மொழிகள் என்றும் கூறுவர். இவர்கள் பேசும் மொழிக்கும் திராவிட மொழிக்கும் ஒற்றுமை இல்லையென்றும் பால், எண் பாகுபாட்டிலும் வேற்றுமை உணர்த்தும் முறையிலும் வேறுபடுகிறது என்று கிரியர்ஸன் கூறுகிறார்.[3-A] ஆஸ்டிரிக் மொழிப்பிரிவை இவண்கண் ஆராய்வோம்.

ஆஸ்டிரிக் மொழிக் குடும்பம்



3-A. Grierson, Imperial Gazetter of India, Vol. 1 PP. 378-79

ஆஸ்டிரிக் மொழிக் குடும்பத்தை முண்டா பிரிவு என்றும் முண்டா அல்லாத மான்கோமர் பிரிவு என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். தொல் முண்டா பிரிவின் பிரிவுகளை (3-ஆ) இவண்கண் காட்டப்பட்டுள்ளது.



3-ஆ Norman H. Zide, Current trends in Linguistics. pp. 412-413, 1963.

முண்டா உட்பிரிவுகள்

படம் 1.



படம் 2.



படம் 3.



படம் 4,



4. N. H. Zide and D. L. Stampe, University of Chicago 'The Place of Kharia - Juang in the Munda family' —Studies in Indian Linguistics pp. 370-73.

ஆஸ்டிரிக் மொழிக் குடும்பத்தை மான்-கோமர் பிரிவு என்றும் முண்டா பிரிவு என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். மான்கோமர் பிரிவில் குறிப்பிடத்தக்கவை அஸ்ஸாமில் பேசும்காசியும் நிக்கோபர் தீவில் பேசப்படும் நிக்கோபரி மொழியுமாகும். நிக்கோபர் மொழியை பிலரனும், இராதாகிருஷ்ணனும் ஆராய்ந்துள்ளனர். மேலும் பைபிளை கார் நிக்கோபரில் மொழிபெயர்த்துள்ளனர். பின்னோவ் (Pinnow) நிக்கோபரியை கிழக்குப் பிரிவில் வகைப்படுத்து கிறார். சின்டென்ங்கைபனுர் என்றழைப்ப துண்டு. மானிட வியலாரும் இப்பழங்குடிமக்களை பனுர் என்றே அழைக்கின்றனர். அஸ்ஸாமில் காசி மொழியைத்தவிர மற்ற மொழிகள் திபெத்தோ-பர்மிய மொழிக் குடும் பத்தைச் சார்ந்ததாகும். இம்மொழிகள் ஓரசையுடையதாகும். பாலோங்க் மொழிக்கும் மோன்னுக்கும் சிறிதளவே ஒற்றுமையுண்டு. பாலோங்க் மேஹோங்கில் பேசப்படுகின்றது. காரேனின் சிதைந்த வடிவம்தான் தானுவ் ஆகும். காசியின் கிளைமொழி (dialects) களான சின்டெங்க், லிங்கைம், வார் முதலியன காசி,ஜெயிந்தியா குன்றுகளில் பேசப்படுகின்றன. பேராசிரியர் குஹறன்தான் காசி மொழி ஆஸ்டிரிக் மொழிக்குடும்பத்தைச் சார்ந்தது என்று முதன்முதலில் கூறினார் சொற்கோவைகளில் மட்டுமின்றி வாக்கிய அமைப்பிலும் மோன்னுக்கும் இம்மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இப்பிரிவின்கீழ் ஏழு மொழிகள் அடங்கியுள்ளன.

உலகமொழிகளையெல்லாம் தனிநிலைமொழி, ஒட்டுநிலைமொழி, உட்பிணைப்புநிலை என மூவகைப்படுத்துகின்றனர்; இஃது மொழிகளைப்பாகுபாடு செய்யும் முறையாகும். முண்டாமொழிகள் ஒட்டுநிலை பற்றி அமைந்த சொற்களையுடையவையாகும்; உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு இல்லை; உயிருள்ளன, உயிரில்லன என்ற பாகுபாடே உண்டு. ஒருமை, இருமை, பன்மை என மூவகை எண் உண்டு. திராவிட மொழிகளைப்போன்று பத்துப் பத்தாக எண்ணுமல், இருபது இருபதாக எண்ணுகிறார்கள். எதிர்மறை வினைகள் இல்லை. திராவிட மொழிக்கும் முண்டா மொழிக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. இரண்டு மொழிகளும் ஒட்டுநிலைபற்றி அமைந்த சொற்களையுடையது. சொற்கோவையிலும் சில ஒற்றுமைகள் உள. இக்காரணங்களால் இவ்விரண்டு மொழிக் குடும்பங்கட்கும் தொடர்புண்டு எனக் கூற முடியாது. முண்டா மொழிகள் ஒரு காலத்தில் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் பேசியிருக்க வேண்டுமெனப் பேராசிரியர் தாம்ஸன் கூறுகிறார். ஆஸ்டிரிக் மொழிக் குடும்பத்தின் ஆஸ்டிரேனேசியன் பிரிவு தென்கிழக்காசியநாடுகளில் பேசப்படுவதால் இவ்வாறு அவரை எண்ணச் செய்துள்ளது.

முண்டா மொழிப் பிரிவை முதலில் 'கொலோரியன் மொழியினம்' என்றே அழைத்தனர். சிலர் இதனை மறுத்தனர். பேராசிரியர் மாக்ஸ் முல்லர்தான் இம்மொழிகளை முதன்முதலாக 'முண்டா' எனப் பெயரிட்டு அழைத்தார்.[5] இவர் துருக்கி மொழியைக்கூட முண்டா மொழிப் பிரிவைச் சார்ந்த சந்தாலி மொழியுடன் ஒப்பிட்டுப் பேசுகிறார். பெரும்பாலான இம்மொழிகள் பேசும் பழங்குடி மக்கள் தங்களை 'மனிதன்' என்ற பொருளில் அழைக்கிறார்கள். ஆரியரல்லாத பழங்குடி மக்களைக் குறிப்பதற்கு 'கோல்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றார்கள். பேராசிரியர் நார்மன் கைய்ட் மற்றும் ஸ்டாம்பே ஆகியோர் முண்டா மொழிகளை நான்கு வகையாகப் பிரிக்கின்றனர், 1. கொர்க்கு, 2. கேர்வாரி, 3. கறியா-ஜுவாங், 4. தென்முண்டா. முண்டா துணைப்பிரிவிலேயே கேர்வாரி கிளைமொழிகளும் கொர்க்கு, தென் முண்டா துணைப்பிரிவுகளுங் கிளைத்துள்ளன. கொர்க்கு, கேர்வாரி முதலான வடமுண்டா பிரிவைத் தவிரத் தென்முண்டா பிரிவும் உள்ளது. இப்பேராசிரியர்கள் கறியா-ஜுவாங்கை மத்திய முண்டா பிரிவு எனப் பிரித்துள்ளனர்கள். முண்டா மொழிகளின் பல்வேறு பிரிவுகள் முன்பக்கத்தில் பல படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

முண்டா மொழிப் பிரிவிலே சந்தாலி ($2\frac{1}{2}$ மில்லியன்) மொழி பீஹார், ஒரிஸ்ஸா, வங்காளம், அஸ்ஸாம் முதலியவிடங்களில் பேசப்படுகிறது. முண்டாரி, ஹோ, கறியா, பூமிஜ், கொர்கு முதலியன மத்திய பிரதேசத்திலும், சவரா, கதபா முதலியன ஒரிஸ்ஸாவிலும், காசி அஸ்ஸாமிலும், நிக்கோபரி அந்தமான் தீவையடுத்துள்ள நிக்கோபர் தீவிலுங் பேசப்படுகின்றன. இவர்கள் தங்களுக்கருகாமையில் வாழும் மக்களது மொழியையும் பேசுகின்றனர். மேலும் இம்மொழிகளைப் பேசுவோர்கள் பர்மா, இந்தோனேசியா முதலியவிடங்களிலும் வாழ்கிறார்கள். ஆஸ்டிரிக் மொழியினரில் சிலர் தற்பொழுது ஆரிய மொழிகளைத் தழுவ ஆரம்பித்து விட்டனர். ஆரிய மொழிகளில் ஆஸ்டிரிக் மொழிக்கூறுபாட்டைக் காணலாம். சந்தாலி போன்ற மொழிகட்கு கிறிஸ்தவ மிஷனரி எழுத்து வடிவம் உண்டாக்கியுள்ளது. மேலும் கல்கத்தா பல்கலைக்கழகம் காசி, சந்தாலி போன்ற மொழிகளை அங்கீகரித்துள்ளது இவண்கண் குறிப்படத்தக்கதாகும்.[6]

---

5. Max Muller, Letter on the Turanian Languages, 1853.
6. The Adivasis pp 68-69, Ministry of Information and Broadcasting New Delhi.

சந்தாலி மொழி பேசுவோர்கள் சந்தால் பர்க்கனு பீர்பூம், முர்ஷிதாபத், டர்த்வான், மித்னபூர் ஆகியவிடங்களில்வாழ்கிறார்கள். மஹலி, கார்மாலி முதலான சந்தாலியின் கிளைமொழிகள் சந்தால் பர்க்கனுவில் பேசப்படுகின்றன. சந்தாலி மொழிக்கு உள்ள இலக்கணங்களிலே மிகச் சிறந்ததாக ஸ்க்ரோஃப்ஸ்ருட்டின் (Skrefsrud's Grammar) இலக்கணத்தைத்தான் குறிப்பிடுகிறார்கள். மார்ட்டின் அவர்கள் ஆங்கில சந்தாலி அகராதியொன்றும் வெளியிட்டுள்ளார். கிறிஸ்தவ வேத நூலான பைபிளை சந்தாலி மொழியில் மொழிபெயர்த்துள்ளார்கள். பேராசிரியர் தாம்ஸென் அவர்கள் இம்மொழியை ஒப்பியல் அடிப்படையில் ஆராய்ந்துள்ளார்கள். ஹோவைகோல்என்றழைப்பதுவுமுண்டு. இம்மொழியில் இறுதி வருடொலியை ஒலிப்பதில்லை. பூமிஜும் பிர்ஹோரும் சோட்டா நாக்பூரில் பேசப்படுகின்றன. பைபிளை மூண்டாரி மொழியில் மொழி பெயர்த்துள்ளார்கள். கொர்வா மொழி சோட்டா-நாக்பூரின் மேற்குப் பகுதியில் பேசப்படுகின்றது. சிங்கிலி இதனுடைய கிளைமொழியாகும். கறியா மொழி பேசுவோர் பெரும்பாலும் ராஞ்சி மாவட்டத்தில் உள்ளனர். கறியா மக்கள் வங்களாத்தில் ஒருவகையான வங்கமொழியையும் ஒரிஸ்ஸாவில் திராவிடமொழி ஒன்றினையும் பேசுகிறார்கள். ஒரிஸ்ஸாவில் பேசப்படும் ஜுவாங் கறியா மொழியுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். மானிடவியல் ஆராய்ச்சித்துறையைச் சார்ந்த தாஸ்குப்தா அவர்கள் இம்மொழிக்கு விளக்க இலக்கணமொன்று எழுதியுள்ளார்கள்,[7] டாக்டர் மேட்ஸன் (Wisconsin University...)அவர்களும் ஜுவாங் மொழியில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்கள். ஜுவாங் பழங்குடி மக்கள் சமூக-பொருளாதாரத்துறையில் மிகவும் பின்தங்கியுள்ளனர். அசுரி மொழிக்கு டாக்டர் ஹோகன் இலக்கணமொன்று வரைந்துள்ளார். கோரா மொழியுடன் கிஸான் மொழியை ஒன்றுபடுத்திக் கூறுகிறார்கள். ஆனால், கிஸான் மொழி திராவிட குடும்பத்தைச் சார்ந்தது எனப் பேராசிரியர் பர்ரோவும் திரு. சுதிபூஷன் பட்டாச்சாரியா அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். சவராமொழியைப் பற்றியும் சவரா பழங்குடிகளைப் பற்றியும் சமஸ்கிருத இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொர்க்கு மத்திய பிரதேச பெரார் வட்டத்தில் பேசப்படுகின்றது. மேற்கத்திய கொர்க்குக்கு மூவ்வாசி, நிஹாலி என்ற இரு கிளை மொழிகள் உண்டு. இம்மொழிகளில் திராவிடமொழிக் கூறுபாடுகள் காணப்படுகின்றன. கர்காலி, மஹிலி, மஞ்ச்ஹி பஹாரியா முதலியன மொழியியல் சர்வேயில்

7. D. Das Gupta, A Descriptive, analysis of Juang, Anthropological Survey of India, Calcutta-13.

சந்தாலி மொழியுடன் வகைப்படுத்தப்பட்டுள்ளன. சந்தாலிக்கு அடுத்தபடியாக கேவர்வாரி கருதப்படுகின்றது. கோல், தார் முதலியவற்றையும் முண்டா பிரிவில் சேர்க்க முயற்சி செய்கின்றனர். ஒரிஸ்ஸாவில் உள்ள பூமிஜ் பழங்குடியினர் கிஸான் மொழி பேசுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் குறிப்பிடும்பொழுது கிஸான்-பூமிஜ் எனக் குறிப்பிட வேண்டும்.

முண்டா மொழிகட்கும் திராவிட மொழிகட்கும் ஒற்றுமையிருப்பதாகச்சில மொழியியலார் கூறுகின்றனர். கோல்பழங்குடிகளையும் தமிழகத்திலுள்ள சோழர்களையும் ஒன்றுபடுத்திக் கூறுகின்றனர். கோல் பழங்குடியினர்க்கும் சோழர்கட்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது வரலாற்றறிஞர்களின் கருத்தாகும். திராவிடர்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதி வழியாக இந்தியாவிற்கு வந்தவர்கள் என்பதற்கு பிராஹுவி மொழி பலுசிஸ்தானத்தில் பேசப்படுவதும் மொஹஞ்சதாரோ-ஹரப்பா நாகரிகமும் சான்றுகளாகும். முண்டா மொழியினர் இந்தியாவின் வடகிழக்குப் பகுதி வழியாக இந்தியாவிற்கு வந்தனர் என்பதற்கு இனவியல் சான்றுகள் உண்டு. சின் மொழிக்கும் தமிழுக்கும் பொதுவாக உள்ள சில சொற்கோவைகளைவைத்து இவ்விரண்டு மொழிகளையும் ஒற்றுமைப்படுத்திக் காட்டுகிறார்கள்[8]. ஆனால், இரண்டுவேறுபட்ட குடும்பத்தைச் சார்ந்த மொழிகளை வைத்து ஆராயக்கூடாது, சில சொற்கோவைகள் பொதுவாகவிருப்பது தற்செயலானதேயாகும். இன்று முண்டா மொழி பேசும் பழங்குடி மக்களில் சிலரும் திராவிட மொழி பேசும் 'கோண்டி' மக்களில் சிலரும் ஆரிய மொழியைப் பேசுகின்றனர். சோட்டா-நாக்பூரில் வாழும் ஒரொவொன்களில் சிலர் முண்டா மொழிகளைப் பேசுகின்றனர். எனவே, மொழிகளை வகைப்படுத்தும்பொழுது வரலாற்றுச் சான்றுடனும் நிலவியல் அடிப்படையிலும் இனவியல் கருத்துப்படியும் ஆராய்ந்து, வகைப்படுத்த வேண்டும். மொழிகளில் உள்ள சில பொதுக் கூறுபாடுகளை வைத்து ஒப்பிட்டு ஆராய முற்பட்டால், ஒருவகையில் உலக மொழிகள் அனைத்தையும் ஒப்பிட்டு ஆராயலாம். முண்டா மொழியினர்க்கும் திராவிட மொழியினர்க்கும் எவ்விதத் தொடர்புமில்லையென்பது இனவியலாரின் (ethnologist) கருத்தாகும். ஆஸ்டிரிக் மொழிக் குடும்பம் தனிப்பட்ட மொழிக் குடும்பம் என்பது பல மொழியியல் பேரறிஞர்களின் முடிவாகும்.

---

8. Census of India, 1961, Vulume 1, pp. 376-391

சங்க கால ஊர்ப் பெயர்கள்

சி. நாச்சிமுத்து, எம். ஏ.,
ஆராய்ச்சி மாணவர், தமிழ் ஆராய்ச்சித் துறை,
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

சங்க இலக்கியங்கள் தமிழருடைய பழங்கால வாழ்க்கையைப்பற்றி அறிய இன்று இருக்கின்ற அரிய மூலங்களில் ஒன்றாகும். அந்த இலக்கியங்களிலிருந்து அக்கால அரசு, சமூகம், பொருளாதாரம், பண்பாடு போன்ற பலவகையான துறைகளைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்க முடிகிறது. அதே போல அந்தக் காலத் தமிழகத்தின் பூகோள நிலை, ஊரமைப்பு நிலை போன்றவற்றைப் பற்றியும் பல செய்திகளைக் காண முடியும். அவ்வகையில் ஊர்ப் பெயர்களைப் பற்றி மேற்கொண்ட ஆய்வு முயற்சியின் முதல் வெளியீடே இக்கட்டுரை.

அக்காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து நிலப்பாகுபாடு புலனெறி வழக்கிலும் சரி, உலகியலிலும் சரி நன்றாகவே உணரப்பட்டிருந்தது. இப்பாகுபாடு, மக்கள் பண்பாடு, ஒழுகலாறுகள், ஆட்பெயர்கள், ஊர்ப் பெயர்கள் எல்லாவற்றிலும் ஊடுருவியிருந்தது. எனவே நிலத்தின் பூகோள அமைப்பு மக்கள் வாழ்க்கையைப் பெருமளவில் பாதித்து வேறுபடுத்தியது எனலாம். அன்று எழுந்த ஊர்ப் பெயர்கள் பலவும் இயற்கை அமைப்புக்களை — நில அமைப்புக்களை விவரிக்கும் முறையில் அமைந்த விளக்கப் பெயர்களாகவே இருந்தன.

ஒவ்வொரு நிலத்திற்கும் இன்னவகையில் ஊர்ப் பெயர்கள் விகுதி பெறவேண்டும் என்று பிற்காலத்தில் இலக்கண வரையறைகள் காணப்படுகின்றன. குறிஞ்சி நிலத்து ஊர்கள், குறிச்சி, சிறுகுடி என்றும், முல்லை நிலத்து ஊர்கள் பாடி, சேரி என்றும, பாலை நிலதது ஊர்கள் பறந்தலை, குறும்பு என்றும், நெய்தல் நிலத்து ஊர்கள் பாக்கம, பட்டினம் எனவும வகைப்படுத்தப்பட்டன; ஆனல் இவ்வரையறை சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் மிகத் தெளிவாக உருப்பெற வில்லை என்று தோன்றுகின்றது. பாக்கம் நெய்தல் நிலத்து ஊர்க்கும் வருகிறது.

"புன்னையங் கொழுநிழல் முன்னுய்த்துப் பரப்பும்
துறைகெழு இருந்த பாக்கமும்" (நற் : 101 : 4—5)

இதே விருதி குறிஞ்சி நிலத்து ஊர்க்கும் வருகிறது.

''சிலம்படைந்திருந்த பாக்கம்'' (மலைபடு ; 162)

'சிறுகுடி' குறிஞ்சியிலும், நெய்தலிலும் வருகிறது.

''குன்றச் சிறுகுடி'' (குறு : 332 : 5) (குறிஞ்சி)
'குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே'' (குறு : 184 ; 2)
(பரதவர்குடி)

இவ்வரையறைகள் மயங்கிக் கிடந்தமைக்குக் காரணம் நில அமைப்பே அவ்வாறு ஒன்றோடு ஒன்று கலந்து காணப்பட்டதுதான். ஐந்திணை நில அமைப்புக்களும் மூவேந்தர் நாட்டிலும் தலைமயங்கிக் கிடக்கும் செழிப்பைப் புலவர்கள் பல இடங்களில் பாடுகிறார்கள். (மதுரைக் காஞ்சி 238—326; பெரும்பாணாற்றுப்படை : 39—420; பொருநராற் றுப்படை 178—226; பதிற் : 30).

சேர அரசனைப் பற்றிப் பாடும் பாடலில் புலவர் பொய்கையார் சேரநாட்டின் திணைமயக்கத்தைச் சுட்டிக்காட்டுகிறார்.

''நாடன் என்கோ ஊரன் என்கோ
பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ
யாங்கனம் மொழிகோ ஓங்குவாட் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பின் அயலது
இறங்குகதிர் அலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே'' (புறம் : 49)

இப்படிப்பட்ட கலப்பு நிலையில் தெளிவான வரையறைகள் ஊர்ப்பெயர் களில் ஏற்படுவது அருமையே.

சங்க இலக்கியங்களில் ஊர்கள் இருவகையில் இடம்பெறுகின்றன. முதலாவதாக அக இலக்கியங்களில் சுட்டி ஒருவர்பெயர் கொளப்பெறூர் என்ற வரையறை இருப்பதால் அவற்றில் தலைவன் தலைவருடைய கற்பனையான பொது ஊர்ப்பெயர்களே திணை மரபுக்கேற்பச் சுட்டப் படுகின்றன.

'நறவுமலி பாக்கத்துக் குறமகள்' (குறு. 394:2)
'சிறுகுடிக் குறவன்' (குற:95:1-3)
'தண்துறை ஊரன்' (குறு. 91 : 3 : நற் : 300:4)
'குறுந்தொடி தந்தை ஊர்' (குறு. 233 : 7)
'குன்றுசேர் சிறுகுடி' (குறு. 108:1)

இரண்டாவதாக உண்மையான ஊர்ப்பெயர்கள் பல வருகின்றன. அவை பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இடம் பெறுகின்றன.

1. அரசர் குறுநில மன்னர்களின் புகழ்பாடும் புறப்பாடல்களில் அவர்களுடைய நகரங்களும், ஊர்களும் கூறப்படுகின்றன. (பத்துப் பாட்டில் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, எட்டுத் தொகையில் புறநானூறு).

2. ஆற்றுப்படையில் பாட்டுடைத் தலைவன் நாட்டிலுள்ள ஊர் களைப் பற்றி விளக்கமான செய்திகள் காணப்படுகின்றன. (திருமுரு காற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, மலைபடுகடாம்)

3. அகப்பாடல்களில் தலைவியை நகரஙகளோடு ஒப்பிடுவது மிகுதி யாகக் காணப்படுகிறது. இதனாலும் பல ஊர்களின் பெயர்கள் நமக்குத் தெரியவருகின்றன. (ஐங்: 54;3; 55:2; 56:2; 57:2 58:7; 171:3; 175:4; 177:4; 178:3; 179:3; 180:4; அகம் 10:13; 44:13; 60:7.)

மேலும் போர்க்களங்கள், அரசர்களுடைய நகரங்கள் போன்ற புறச் செய்திகள் மிகுதியும் அகப்பாடல்களில் காணப்படுகின்றன. ஒரு வகையில் நமக்குத் தெரிய வருகின்ற சங்ககால ஊர்களில் பலவும் அகப் பாடல்களில் மட்டுமே காணப்படுவனவாகும்.

சங்க இலக்கியப் பாடல்களிலிருந்து மொத்தம் சுமார் 200 ஊர்ப் பெயர்கள் தெரிய வருகின்றன. பல பாடல்களின் கொளு அல்லது பதிகம் ஆகியவற்றில் சுமார் 100 ஊர்ப்பெயர்கள் உள்ளன.[1] இவைகள் சங்ககால ஊர்பெயர் எண்ணிக்கையில் குறிப்பிடத் தகுந்தவையாக இருந்திருக்கலாம். மொத்த எண்ணிக்கையில் இவை எத்தனை விழுக் காடு வரும் என்பதும் தெரியவில்லை.

பாரியின் நாடு முந்நூறு ஊர்களை உடையதாக இருந்தது. (முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு. புறம் 110 ; 3) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன்னைப் பாடிய குமட்டூர்க் கண்ணனாருக்குப் பிரம தாயமாகக் கொடுத்த பரிசில் உம்பற்காட்டு ஐஞ்ஞூறூர். செல்வக் கடுங்கோ வாழியாதன் மலைமேல் ஏறிநின்று கண்ணுக்குத் தெரிந்த ஊர்களை எல்லாம் பரிசிலாக வழங்கியிருக்கிறான் (பதிற் 85 : 12— 3, பதிற் 7-ஆம் பதிகம்). காரி என்ற வள்ளல் குறும்பொறை நன்னாடு என்ற பகுதியைக் கோடியர்க்கு ஈந்திருக்கிறான்.[2] இக்குறிப்புகள் எல்லாம் அக்கால ஊர்களைப் பற்றிய ஒரு பொது எண்ணத்தைநமக்குத் தருகின்றன.

இலக்கியங்கள் ஊர்களை இருமுறையில் சுட்டுகின்றன. 1. புகழ் பெற்ற பழமையான மூதூர்களாகிய பேரூர்கள். 2. சிறுமையுடைய சிற்றூர்கள். முதல் வகையைச் சேர்ந்த ஊர்களைத் 'தொல்திணை மூதூர்' (மலை 40) 'பழவிறல் மூதூர்' (பெரும்பாண் 402) 'தொல்பதி' (பொருநர் ; 122) என்ற அடைமொழிகளுடன் புலவர்கள் குறிப்பிடுகின்றனர். இரண்டாவது வகையைச் சேர்ந்த சிற்றூர்கள் புகழிலும் பெருமையிலும் சிறுமையுடையன. 'புல்வேய் குரம்பை ஊரென உணராச் சிறுமை' (அகம் 200 : 2—3) உடையதென இச்சிறு குடிகள் கூறப்படுகின்றன. இதைப் போன்ற சிற்றூர்கள் பண்டைத் தமிழகத்தில் மிகுதியாக இருந்தன.

கரிகாலனுடைய நாடு நன்பல்லூர்களை உடையதாக இருந்தது என்று முடத்தாமக்கண்ணியார் பாடுகிருர். (பொருநர் : 170). சோணுட்டைப் புலவர் உருத்திரங்கண்ணனார்,

> கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
> குறும்பல்லூர் நெடுஞ்சோணுடு (பட்டி : 27—28)

என்று அதன் மிகுதியான சிறிய ஊர்களைக் குறிப்பிடுகிறார். தலைவன் தலைவியர் உடன்போக்குச் செல்லும் கானம் குறும்பல்லூர்களை உடையதாக இருந்தது என்று கூறப்படுகிறது (நற்: 9: 11-12). இவ்வாறு மலிந்திருந்த இச்சிற்றூர்களின் பெயர்கள் எவை என்பது இன்று நமக்குத் தெரியவில்லை.

இனி, இடைக்கின்ற ஊர்ப்பெயர்களைப் பல படி நிலைகளில் ஆராய வேண்டியிருக்கிறது. முதலாவதாக அப்பெயர்கள் இன்றும் தொடர்ந்து வழக்கில் இருக்கின்றனவா, அப்பெயர் தாங்கிய ஊர்களின் தற்கால இருப்பிடங்கள் எவை, பெயர்கள் என்ன மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன என்பன போன்ற செய்திகள் ஆயப்படவேண்டும்.

அக்காலத்தில் போரில் ஊர்கள் அழிக்கப்பட்டன (மதுரைக்காஞ்சி 158. பட்டி; 269-70): அதனால் பல ஊர்ப்பெயர்கள் மறைந்திருக்கலாம். சங்ககாலத்திலேயே அரையம் என்ற நகர் அழிந்துவிட்டது (புறம்202). பிற்காலத்தில் புகார் கடலால் அழிந்தது. ஆனால் அதற்குப் பக்கத்திலிருந்த சாய்க்காடு (நற்: 73:9) இன்றும் இருக்கிறது.

ஊர்ப்பெயர்களில் தற்கால வடிவங்களையும், இருப்பிடத்தையும் கண்டு பிடிப்பது கடினமானது. ஏனெனில் காலப்போக்கில் மொழி மரபுக்கேற்ப ஒலி நிலையில் பெயர்கள் மிகவும் திரிந்து காணப்படுகின்றன. சங்க காலத்தில் 'நன்ரு' (பதிற் 8. பதிகம்) என்ற குன்று, நண்ணு

கணு, திருநணு-என்று மாறி இன்று பவானி என்று வழங்குகிறது. சங்க கால ஓய்மான் களின் புலியூர் இன்று ஓமாம்புலியூர் (சிதம்பரத்திற்கு அண்மையில்) என்று மாறி புராணக் கதை பெற்றுவிட்டது. மேலும் ஒரே பெயர் தாங்கிய பல ஊர்கள் தமிழகத்தில் ஆங்காங்கே காணப்படுவது 'உண்மையான' பெயரைக் கண்டு பிடிப்பதைக் கடினமாக்குகிறது. சேரர் தலைநகரமாகிய 'வஞ்சி' என்ற பெயர் மலை நாட்டிலும், கொங்கு நாட்டிலும் காணப்பட்டதால் எது உண்மையானது என்று கண்டு பிடிப்பதில் ஏற்பட்ட விவாதம் தமிழ் ஆராய்ச்சி உலகிற்குப் பழங்கதை. இதைப்போலவே ஆலங்காடு என்ற பெயர் கேரளத்தில் (கோழிக் கோட்டிற்குக் கிழக்கே பத்தாவது கல்லில் ஒன்றும், ஆல்வாய்க்கு மேற்கே நான்காவது கல்லில் ஒன்றும்) இரண்டும், சோழநாட்டில் ஒன்றும் (தலையாலங்காடு), தொண்டை நாட்டில் ஒன்றும் (மையனூர் ஆலங்காடு) காணப்படுகின்றது. இப்பெயரில் 'தலை' என்ற அடை மொழி ஒரே மாதிரியான பல பெயர்களிலிருந்தும் வேறுபடுத்துவதற்காக அக்காலத்திலேயே அமைந்திருந்தது குறிப்பிடற்குரியது.

சங்க காலத்தில் இருந்து இன்று மறைந்துபோன பெயர்கள் பல இடைக்காலக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. எனவே கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் அலசி ஆராய்ந்தால் பல ஊர்ப் பெயர்களின் இருப்பிடங்களைக் கண்டறிய முடியும். காட்டாக, டவ்வத்திரி (அகம் 340 : 7) என்ற சங்க காலப் பெயரைக் கல்வெட்டுக்களிலேயே அறிகின்றோம். (இது இன்று நெல்லூர் மாவட்டம் கூடூர் வட்டத்தில் ரெட்டிபாளையம் எனப்படுகிறது. பார்க்க: Topographical list of Inscriptions of the Madras Presidency, Nellore, No. 237, 238, 759) இவ்வாறு பல பழைய ஊர்ப் பெயர்கள் கல்வெட்டுக்களால் கண்டறியப்பட்டிருக்கின்றன.[3] சங்க இலக்கியப் பதிப்பாசிரியர் டாக்டர் உ. வே. சா. வும், உரையாசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையும் பல பழைய ஊர்களின் தற்கால இருப்பிடத்தைக் கண்டு காட்டியிருக்கிறார்கள்.

ஊர்ப்பெயர் ஆய்வின் இரண்டாவது நிலை பொருள் விளக்கமாகும். அதாவது ஒவ்வொரு பெயரின் பொருளையும் விளக்கி அதன் பொருட் பின்னணியைத் தெளிவுபடுத்துவதாகும். குன்றூர் (நற் : 280 : 8) என்றால் மலையை ஒட்டிய ஊர். வேள் + ஊர் = வேளிர்களுடைய ஊர். (அகம் 166 : 4) என்று பெயரின் பொருளை விளக்கிக் காட்டவேண்டும்.

சங்கப் பாடல்களிலேயே ஊர்ப்பெயர்களின் பொருள் விளங்குமாறு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

நல்லியக் கோடனுடைய 'எயிற்பட்டினத்தைக் குறிக்கும்பொழுது அதன் பொருள் விளங்கும்படி 'மதிலொடு.....பெயரிய பட்டினம்' (சிறுபாண் : 152—3) என்று பாடுகின்றார் புலவர். மதுரைக் காஞ்சியில் வரும் 'சீர் சான்ற உயர் நெல்லின் ஊர்' (அடி : 87—88) என்பதை நச்சினார்க்கினியர் சாலி என்றும் நெல்லின் பெயரால் வந்த 'சாலியூர்' என்றும் கூறுகிறார். இவ்வாறு ஊர்ப் பெயர்களையே அன்றி மற்றப் பெயர்களையும் இவ்வாறு வேறு விதமாகக் கூறும் மரபு சங்க இலக்கியம் முழுதும் காணப்படுகிறது.[4]

சில இடப்பெயர்களைக் கூறாது அண்மையிலுள்ள ஓரிடத்தைச் சுட்டும் முறையும் காணப்படுகிறது. திருச்சிராப்பள்ளி மலையின் பெயர் கூறாது 'உறந்தைக் குணாது நெடுங்குன்றம்' (அகம் 4: 13-15) என்று பாடுகிறார் புலவர். திருப்பரங்குன்று 'கூடற் குடவயிற் குன்று' (திருமுருகு 71, அகம் 149:14-7) என்றே சில இடங்களில் கூறப்படுகின்றது. இதற்குக் காரணம் அவ்விடங்களுக்குப் பெயர்கள் ஏற்படவில்லையா? அல்லது ஏற்பட்டுப்பரவலான வழக்கிற்கு வரவில்லையா என்பது தெரியவில்லை.[5]

பிற்காலத்தைப் போலப் புராணக் கதைகளைக் கூறி ஊர்களின் பெயர்க்கு விளக்கம் கூறும் மரபு சங்ககாலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. எனினும் 'திறல் வேல் நுதியில் பூத்த கேணிவிறல்வேல் வென்றி வேலூர்' (சிறுபாண்:172-3) என்ற அடிக்கு நச்சினார்க்கினியர்,

"முருகன் கையில் வலியினை உடையதாகிய வேலின் நுதி போலக் கேணி பூக்கப்பட்ட வெற்றியையுடைய வேலாலே வெற்றியை உடைய வேலூர்-என்றது: நல்லியக் கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்ட வழி அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறியென்று கனவிற் கூறி அதில் பூவைத் தன் வேலாக நிருமித்ததொரு கதை கூறிற்று. இதனாலே வேலூ ரென்று பெயராயிற்று" என்று விளக்குவதை நோக்கும் போது சங்க காலத்திலேயே இக்கதை இருந்திருக்குமா? அல்லது நச்சினார்க்கினியர் தன் கருத்தை (14-ஆம் நூ) இங்கு ஏற்றுகிறாரா என்ற ஐயம் நமக்கு எழுகிறது. பொதுவாகப் புராணக்கதைகள் பெருவீரர்கள் இறந்த பின்னர்த்தான் அவர்களை மையமாகக் கொண்டு புனையப்படும். ஆனால் இங்கு நல்லியக் கோடன் வாழ்ந்த காலத்திலேயே வேலூர் இருந்திருக்கிறது. அவனுக்கு முன்பும் அவ்வூர் இருந்திருக்கலாம். எனவே நல்லியக்கோடன் இறந்ததன்பின் செடுகாலத்திற்குப் பின்னர்த்தான் இப்புராணக் கதை தோன்றியிருக்க வேண்டும். அக்கதையையே நச்சினார்க்கினியர் இங்குப்

பொருத்திக் காட்டினாலல் வேண்டும். இருந்தபோதிலும் இதைப் போன்ற நம்பிக்கைகளும் கதைகளும் சங்க காலத்தில் இருந்திருக்கவே முடியாது என்று தள்ளிவிடவும் முடியாது. ஏனெனில் அந்தக் காலத்தில் கோயில்களைப் பூதங்கள் காக்கின்றன (பூதம் காக்கும் புகலருங் கடிநகர் - பூதங்கள் வாசலிலே காத்திருக்கும் புகற்கரிய அச்சத்தையுடைய காளி கோட்டம் - பட்டி : 57) என்பது போன்ற நம்பிக்கைகள் இருந்திருக்கின்றன. ஒவ்வொரு ஊரிலும் அந்தணர்கள் இருந்திருக்கின்றனர். (அந்தணர் அருகா அருங்கடி வியனகர் அந்தண கிடங்கின் அவன் ஆமூர். சிறுபாண் 187—8) அந்தணர்கள் தனி ஊர்களிலும் வசித்தனர் (மறை காப்பாளர் உறைபதி - பெரும்பாண் 301). இவ்வாறு வைதிக நெறியினர் செல்வாக்குடன் வாழ்ந்திருந்ததைப் போலவே வைதிகப் புராண நம்பிக்கைகளும் அக்காலத்தில் இருந்திருக்கலாம். இது இன்னும் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரியது.

குறிப்புகள்

1. சங்ககால ஊர்ப்பெயர்களைப் பற்றிய என்னுடைய ஆய்வு இன்னும் முற்றுப்பெறவில்லை. எனவே இதில் கொடுக்கப்பட்டுள்ள ஊர்களின் எண்ணிக்கையும், முடிவுகளும் தோராயமானவை; தற்காலிகமானவை.

   சங்க இலக்கியம் என்பதில் கலி, பரிபாடல், திருமுருகாற்றுப் படை ஆகியவைகளையும் (தற்போது) உள்ளடக்கி இருக்கிறேன். பதிகங்களும், கொளுக்களும் — நம்பிக்கைக்கு உரியன என மெய்ப்பிக்கப்பட்டிருப்பதால் இவைகளிலிருந்தும் பெயர்களை எடுத்திருக்கிறேன்.

2. கரிகாலன் பாணர் பாடிச் சென்றால் 'நன்பல்லூர் நாட்டோடு வேழமும் தருவான்' என்ற முடத்தாமக்கண்ணியார் கூற்று நினைத்தற்குரியது. (பொருநர்: 169—173)

3. பார்க்க; அ. 'சேரர் வஞ்சியும் சிலாசாசன வழக்கும்'

   ஆ. 'தேவாரம் பெற்ற தலங்களும் சிலாசாசன வழக்கும்'

   ஆராய்ச்சித் தொகுதி (1964)

   மு. இராகவஐயங்கார் — பக்கம்: 244-263, 280-296

   இ. 'நன்னனது மலைநாடு' டாக்டர் மா. இராசமாணிக்கனார்

ஸ்ரீ

பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை
மணிவிழா மலர் (1961) பக்கம் 243-252

1. புறநானூறும் கல்வெட்டுக்களும்

2. பத்துப்பாட்டும் கல்வெட்டுக்களும்
இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும் (1961)
பக். 101-127, 128-133 தி. வை. சதாசிவப்
பண்டாரத்தார்

4. ஒப்புநோக்குக

அ. குருகொடு பெயர்பெற்ற மால்வரை-பரிபாடல் 5:9 (கிரௌஞ்சம்)

ஆ. தொன்மா இலங்கைக் கருவொடு பெயரிய நன்மா இலங்கை
(சிறுபாண் 119-20)

இ. கருவொடு பெயரிய காண்பினல்லில் (நெடுநல் 114) கருவறை

ஈ. நாளொடு பெயரிய கோளமை விழுமரம் (நெடுநல் 82)உத்தரம்

உ. 'பறவைப் பெயர்ப்படு அத்தம்' (பெரும்பாண் 305)
இராசான்னம் அல்லது மின்மினிநெல்

ஊ. நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழை (முரு. 18)
சாம்பூநதம்

எ. 'செழியன் பெயர்மாண் பெருங்குளம்' (நற். 340:2-3)

ஏ. பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர் (பதிற். 67:2)

5. பெயருள்ள ஊர்களைக்கூடப் புகழ்வாய்ந்த ஓர் இடத்தைக் குறிப்பிட்டுக் கூறும் மரபு காணப்படுகிறது.
பார்க்க:

நறும்பூஞ்சாரற் குறும்பொறைக் குணாஅது
... ...
... ...
சேண்விளங்கு சிறப்பின் ஆமூர் (அகம் 159 : 14-19)

மறைந்த நகர்

புலவர் இரா. சுப்பிரமணியன்,
காஞ்சி, வ. ஆ. மா.

போகம்நீள் புகாரென்றால் பொய்யல்ல, புகழுண்டு
தாகமிலா வணிகர்கள் தமிழ்நெறியை மறவார்கள்
மேகம்நீர் பொய்த்தாலும் காவிரியாள் சோறளிக்க
வேகமின்றி நடந்திட்டாள், விளைவித்தாள், வளமளித்தாள்.

கருணைமொழி காவிரியாள் கால்பலவா யோடி
உருசிறுத்து நீரளிக்க ஊரவரை நாடி
திருவுயர்த்தி முறைநிறுத்திச் சோழர்புகழ் பாடி
வருகின்றாள் புகழ்பரப்பிப் புகார்நகரைத் தேடி.

தெங்கிளநீர்த் தோப்புகளும், தேமாவின் சோலைகளும்
எங்குமிலா வெழில்பரப்பு மேற்றமிகு மாடங்களும்
பங்குபெறு மயல்நாட்டு வணிகர்தம் பழங்குடியுந்
தங்குமந்தப் பூம்புகார் தனையொத்த நகரில்லை.

பொதியப்போ லிமயம்போல் நிலைத்தபுகா ரொன்றாகும்
நதிவளத்தால் நாகரிகம் நிறைந்ததுவும் நன்றாகும்
விதிவழுவா மனுநீதி புரிந்ததுவும் கன்றாகும்
மதிநிறைந்த கரிகாலன் தலைநகரும் புகாராகும்.

கோவேந்தர் வீதிகளும் கொடிமிடைந்த வீதிகளும்
பாவேந்தர் மன்றங்களும் பாட்டிசைப்போர் கூடங்களும்
சாவேந்தும் வீரரும்வாழ் தனிமறுகும்; பரதவர்தம்
ஆவேச விழாக்களனு மழகுசெயு மந்நகரில்.

மணிவண்ணன் கோட்டமுதல் மால்மருகன், ஞாயிற்றோன்,
அணிமிக்க ஐராவதம், வச்சிராயுத, மருகனொடு
பணியணிவான், பலராமன், பௌத்தவிகா ரங்களுக்கும்
கணித்தறியாக் கோயில்பல இருந்தனவாம் புகார்நகரில்.

மன்னவர்கள் சுற்றமுடன் வாழ்விலந்தி வனமும்
கின்னரர்கள் தேவர்களுங் கூடுமுய்யா வனமும்
மன்னுபுகழ் கவேரன்சம் பாதியுறை வனமும்
பன்னருஞ்சீர் பீடிகையு முண்டாமுவ வனமும்

கள்ளர்மனம் நடுங்கவைக்கும் வெள்ளியிடை மன்றம்
உள்ளநோய் களைந்திடுமா மூபரிலஞ்சி மன்றம்
தள்ளாடும் பேய்நஞ்சு போக்கிநெங்கல் மன்றம்
எள்ளளவு பிறழ்ந்தாலும் பாவையழும் மன்றம்.

பட்டினத்துப் பாக்கத்தில் பரதவர் களிருல்மீனின்
முட்போக்கி வயலரகம யிறைச்சியினை நனியுண்பர்,
பட்டாடை யரசர்களும் பணிபுரிவோர், கலைவல்லோர்,
முட்டாத செல்வர்களும், இருந்தனராம்; வாழ்ந்தனராம்;

மருவூரின் பாக்கத்தில் மாண்பாகத் தொழில்புரிவோர்
திருவூரா யாக்கினரால் துணிநெய்வோர், நகைத்தொழிலார்
பெருவணிகர், நவநிதியார், மண்ணீட்டார், பிட்டிடுவார்
தெருக்கள்தனித் தனியாகத் திகழ்ந்தனவாம் புகார்ப்பதியில்.

சிற்பமுட னோவியங்கள் செய்தார்சுதை மண்ணால்
அற்புதமாய்ப் பானைவகை யழகுக்களி மண்ணால்
விற்புருவ மங்கையர்கள் விருந்துங்கடைக் கண்ணால்
நெற்போரின் கூலவகை நினைக்கும் மனக் கண்ணால்.

செங்கற்கள், சின்னங்கள், சிதைந்தபெரு மாளிகைகள்
அங்கிருந்த உறைக்கிணறு, புலிக்கயல்வில் இலச்சனைகள்
தங்கத்தால் காசுவகை, தாழிமுதற் பற்பலவும்
மங்காத வளவர்துறை புகாரென்று சாற்றிடுமால்.

முறையறிந் துரைக்கவோ ருலகறவிதா முண்டு
நிறைபெண்டிர் கொழுநருக்கு நீட்டுவதோ செண்டு
குறையவரு மங்க்கரத்தில் குலவிடுமாம் நண்டு
மறைந்தாலும் மறையாத புகழ்நகராம் பண்டு

கட்டிடத்தின் கலைவன்மை கவினனைத்துங் காட்டும்
மட்டவிழுந் தீறலியர்கள் மீட்டுந்தேன் பாட்டும்
நட்டமின்றிக் கொடுப்பாரும் கொள்வாரு மீட்டும்
பட்டினமாம் புகார்தமிழர் பண்பனைத்தும் நாட்டும்.

சந்தனமும் மணக்குமகிழ் சாம்புநதப் பொன்னும்
வந்திறங்கும் பரிபன்னி ராடிவகை மின்னும்
தந்தம்மணி மிளகுமுத்து பவளப்பொதி இன்னும்
பந்தியாக அடுக்கிடுவார் புகார்த்துறையில்; மன்னும்

நிலத்துவிளை பண்டமெல்லாம் நீர்ப்பரப்ப வேற்றி
கலத்துவரு பொருள்பலவும் நிலத்திலெங்கும் மாற்றிப்
புலத்துறையும் பொருள்களுக்குப் புலிப்பொறியுஞ் சாற்றிப்
நிலத்துப்புரம் நெளியும்புகார்த் துறைநகரே! போற்றி.

வங்கம்வரு பொருள்பலவு மெவ்விடத்தும் ஆட்சி
சுங்கமிட்டு விலைகுறிக்கும் சோழர்புகழ் நீட்சி
அங்குறையும் வாணிகர்கள் விலைபகருங் காட்சி
தங்கத்த மிழகத்தார் தலைநகரின் மாட்சி.

கடல்கடந்து வந்தவயல் நாட்டவரு மன்று
உடனிருந்து வாணிசம்செய் துயர்ந்திட்டார் நன்று
கடனறிந்து பர்மா, ரோம், சீனர்களும் நின்று
விடலறியார் ஈழவர்கள், எகிப்தியர்கள் மன்று.

நால்வகையா னபொருளும் நாளங்காடி தருமால்
வேல்விழியார் விலைபகர்வா ரல்லங்கா டியதனில்
கோல்கோடாத் தமிழரச ரமைத்தகுடி நீரகமும்
மால்வரையும் புத்தபிரான் பீடிகையும், இருந்தனவாம்.

அறச்சாலை வடித்துவிடுவ கஞ்சனைத்தும் வெள்ளம்
அறமுறைக்கும் பௌத்தமணர் பள்ளியுளங் கொள்ளும்
பிறமதத்து மொழியினர்க்கும் பெருகுமின்பந் துள்ளும்
மறப்பறியாக் காதலர்கள் மனமுமங்குக் கிள்ளும்.

தாலமியும் பெரிப்புளூவும் தமிழகத்தைச் சுற்றுங்கால்
காலவெள்ளம் கொண்டநகர் புகார்பற்றி எழுதினரால்
ஓலமிடுங் கடற்றுறையி லுலவியநன் னாகரிகச்
சிலமெலாம் குறித்தெடுத்துச் செகமுழுதும் பரப்பினராம்.

பூம்புகார் தமிழகத்தின் நிலையுணர்த்திப் புகழ்நிறுத்தும்
பூம்புகார் மூவேந்தர் முத்தமிழின் பொருளுரைக்கும்
பூம்புகார் கண்ணகியின் மேகலையின் நிறைபாடும்
பூம்புகார் உலகமக்கள் உறவுகொள்ள வழியாமே.

சங்கச் செய்திகள் :

செந்தமிழ்க் கல்லூரி

11—12—70இல் மூடப்பட்ட செந்தமிழ்க் கல்லூரி, 18—1—71இல் மீண்டும் திறக்கப்பட்டது. சங்கத் தலைவர் தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கள், பெற்றோர் கூட்டத்தைக் கூட்டி, நிலைமையை நடு நிலையோடு ஆராய்ந்து, தீர்ப்புக் கூறினர். பெற்றோர்களின் விருப்பத்திற்கிணங்கக் கல்லூரிகள் மீண்டும் திறக்கப்பட்டது.

சங்கச் செயற்குழுக் கூட்டம்

மதுரைத் தமிழ்ச் சங்கச் செயற்குழுக் கூட்டம் 23—3—71ல், சங்கத்தலைவர் தமிழவேள் திரு. பி டி. இராசன் அவர்கள் தலைமையிற் கூடியது. சங்கச் செயலாளர் அறநெறியண்ணல் திரு கி பழநியப்ப பிள்ளையவர்களின் விலகல் அஞ்சலும், கல்லூரித் தாளாளர் திரு. S. பார்த்தசாரதி நாயுடு B. A. B. L., அவர்களின் விலகல் அஞ்சலும் ஏற்றுக்கொள்ளப்பெற்றன. இவ்விருவரின் தொண்டினைப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பெற்றது. சங்கத்திற்கு ஊதியச்செயலாளர் ஒருவரை (Paid Secretary) அமர்த்த வேண்டுமென முடிவு செய்யப்பெற்றது.

சங்கப் புலவர் தேர்வுகள்

சங்கப் புலவர் தேர்வுகள் கீழ்க்கண்ட நாட்களில் நடைபெறும்:—

புலவர் தேர்வு

3—5—1971	திங்கள்	காலை 10—1	இலக்கியம் 1	பகுதி-1
4—5—1971	செவ்வாய்	காலை 10—1	இலக்கியம் 2	
5—5—1971	புதன்	காலை 10—1	கல்வெட்டு	
6—5—1971	வியாழன்	காலை 10—1	இலக்கணம் 1	பகுதி-2
7—5—1971	வெள்ளி	காலை 10—1	இலக்கணம் 2	
8—5—1971	சனி	காலை 10—1	மொழி இலக்கிய வரலாறு	

இளம் புலவர் தேர்வு

3—5—1971	திங்கள்	மாலை 2—5	இலக்கியம் 1	பகுதி-1
4—5—1971	செவ்வாய்	மாலை 2—5	இலக்கியம் 2	
5—5—1971	புதன்	மாலை 2—5	தென்னிந்திய வரலாறு	
6—5—1971	வியாழன்	மாலை 2—5	இலக்கணம் 1	பகுதி-2
7—5—1971	வெள்ளி	மாலை 2—5	இலக்கணம் 2	
8—5—1971	சனி	மாலை 2—5	கட்டுரை	

நுழைவுத் தேர்வு

3—5—1971	திங்கள்	மாலை 2—5	முதல் தாள்
4—5—1971	செவ்வாய்	மாலை 2—5	இரண்டாம் தாள்
5—5—1971	புதன்	மாலை 2—5	மூன்றும் தாள்

— பாடத் திட்டத்தில் உள்ளபடி

தேர்வு நடைபெறும் மையங்கள் (Centres)

1. மார்த்தாண்டம் — கிறித்துவக் கல்லூரி
2. தூத்துக்குடி — கால்டுவெல் உயர் பள்ளி
3. திருநெல்வேலி — ம. தி. தா. இந்துக் கல்லூரி உயர்பள்ளி
4. மதுரை — 1) மதுரைத் தமிழ்ச் சங்கம்; 2) சேதுபதி உயர்பள்ளி
5. ஆத்தூர் (சேலம்) ஆத்தூர் அரசினர் உயர்பள்ளி
6. விழுப்புரம் — அரசினர் கலைக் கல்லூரி
7. கோயம்புத்தூர் — நகரவை ஆண்கள் உயர்பள்ளி, R. S. புரம்
8. வேலூர் — நகரவை உயர்பள்ளி